Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU


முரசு - 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 16 வெள்ளிக்கிழமை (02.12.2011) பக்கங்கள் 16 ஓசை - 62

Admission open
No Prior Qualifications
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் வேலைவாய்ப்பு உத்தரவாதம்
BIT-Degree University of Colombo
20000 Rs only 1st Year
CIMA-UK
14000 Rs. only fouńation level Course fee
Computer Engineering - USA
Government Scholorship USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree
Free :BCS-UK, IELTS, Hardware, ICDL
(C/1101)
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Schol.
324,Palaly Road,Parameswara Junction.




கற்பனையில் மிதக்காதீர்

06



சரியான நேரம்

08



உதாரணம் தேவை

13



தீர்வை திணிக்க இடமளியோம்

14

# பலமான எதிர்க்கட்சி ஒன்று நாட்டில் இருப்பது அவசியம்

## அரசாங்கம் தெரிவிப்பு

நாட்டில் பலமுள்ள எதிர்க்கட்சி ஒன்றை உருவாக்குவது எதிர்க்கட்சிச் தலைவரின தும் கட்சி உறுப்பினர்களதும் பொறுப்பாகும் என தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வல்ல தெரிவித்தார்.

தகவல் திணைக்களத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போது அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் சக்திமிக்கதான எதிர்க்கட்சி ஒன்றும் இருக்கவேண்டும் என ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். நேற்று முன்தினம் தினம் ஐ.தே.க. உறுப்பினர் மொஹான் லால் கிரேரு அரச தரபபுடன் இணைந்து கொண்டார். இவ்வாறான நிலை நீடித்தால் எவ்வாறு எதிர்க்கட்சி சக்திமிக்கதாக இருக்கும் என கேள்வி கேட்ட ஊடகவியலாளர் தமது கேள்வியின்போது சுட்டிக் காட்டினார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# முன்னாள் பிரதம நீதியரசரே எதிர்க்கட்சியை ஒழித்தார்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவே எதிர்க்கட்சியை இல்லாதொழித்தார் என ஐக்கிய தேசியக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கையில் சரியான எதிர்க்கட்சி கிடையாது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா விமர்சனம் செய்து வருவதுடன் நாட்டில் வலுவான எதிர்க்கட்சி ஒன்று உருவாகுவதனை முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவே தடுத்தார் என்று தயாசிறி குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசராக கடமையாற்றிய காலத்தில் எதிர்க்கட்சிக்கு பாதகமான பல தீர்ப்புக்களை சரத் என் சில்வா வழங்கியுள்ளதாகவும் அரசாங்கக்கட்சிக்கு மாறிய எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சரத் என் சில்வா பக்கபலமாக திகழ்ந்தார் என்றும் அவர் தெரிவித்தார். அரசாங்கத்திற்கு ஆதரவாக (15 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைவதற்கு கூட்டமைப்பு மறுப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணும் வகையில் அரசாங்கம் அமைத்துள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ளுமாறு அரசாங்கம் விடுத்த அழைப்பினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிராகரித்துள்ளதாக அதன் தலைவர் சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் எனத் தெரிவித்து அரசும் - கூட்டமைப்பும் நேற்றைய தினத்துடன் 14 சுற்றுப் பேச்சுக்களை நடாத்தி முடித்திருக்கும் நிலையில், பிரச்சினைக்கான தீர்வை எட்டும் வகையில், எவ்வித முன்முயற்சிகளும், இரு தரப்பினராலும் எடுக்கப்படவில்லை.

இந்த நிலையில் அரசாங்கம், அனைத்துக் கட்சிகளையும் இணைத்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினை அமைத்தது. இனப்பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்தலாமெனவும், எனவே அதில் இணைந்து கொள்ளுமாறும் கூட்டமைப்பிற்கு நேற்றைய தினம் விடுத்த அழைப்பையே சம்பந்தன் நிராகரித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசாங்கம் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணையுமாறு கேட்டுள்ளதே தவிர இரண்டு தரப்பு பேச்சுவார்த்தைகளைக் கைவிட வேண்டுமெனக் கூறவில்லை.

இதுவரை நடத்தப்பட்ட பேச்சுக்களில் பாரிய முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டுவிட்டதாகச் சொல்ல முடியாது. எனினும் என்ன விடயங்கள் குறித்துப் பேசவேண்டும் என கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் அரசுக்கும் - கூட்டமைப்பிற்குமிடையேயான வழமையாக நடைபெற்றுவரும் பேச்சின் 14 ஆவது சுற்றுப் பேச்சு நேற்று நண்பகல் இடம்பெற்றது. (15 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு மக்களை ஏமாற்றும் செயல்

## ஜே.வி.பி. கூறுகிறது



தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைப்பது அவசியமற்ற விடயமெனவும், மக்களை ஏமாற்றுவதற்காகவே இந்தத் தெரிவுக்குழு அமைக்கப்படுவதாகவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பெலவத்தையிலுள்ள ஜே.வி.பி.யின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஜனநாயகத்தை வெற்றி கொள்ளவென ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போராடப் போவதில்லை.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்யும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி. கடந்த 29 ஆம் திகதி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள மக்கள் விடுதலை முன்னணிக்கு எழுத்து மூலம் அழைப்பு விடுக்கப்படவில்லை.

அந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தாலும் மக்கள் விடுதலை முன்னணி (15 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் நிறைவு

அநுராதபுரம் சிறைச்சாலையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் தமது உண்ணாவிரதத்தை கைவிட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அநுராதபுரம் சிறைச்சாலை அதிகாரிகளினால் கடந்த 27 ஆம் திகதி கடுமையாக தாக்கப்பட்டதைக் கண்டித்து, தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.சரவணபவன், செல்வம் அடைக்கலநாதன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேந்திரன், சிவசக்தி ஆனந்தன், எஸ்.சிறிதரன் ஆகியோர உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஒரே நாடு என ஏற்றுக்கொண்டால் முகாம்கள் அமைப்பது தவிர்க்க முடியாது

## என்கிறார் அமைச்சர் பஸில்



ஒரே நாடு என ஏற்றுக் கொண்டால் நாட்டின் அனைத்து பகுதிகளிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட வேண்டும் அதனை தவிர்க்கமுடியாது என்றும் நாட்டில் மக்களுடன் நட்புறவாக செயற்படக் கூடிய படையினரே தற்போது சேவையாற்றுவதாகவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். வரவு செலவுத்திட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (15 ஆம் பக்கம் பார்க்க)

# கஞ்சாவுடன் வந்தவர்கள் பொலிஸாரிடம் சிக்கினர்

மன்னார், பள்ளிமுனை கடற்பரப்பினூடாக பள்ளிமுனை கிராமத்திற்குள் 40 கிலோ நிறையுடைய கஞ்சாப் பொதியுடன் வந்ததாகத் தெரிவிக்கப்படும் இருவர் நேற்று அதிகாலை 3.40 மணியளவில் மன்னார் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கஞ்சா பொதி கேரளாவிலிருந்து கொண்டுவரப்பட்டதாகவும் இது 40 இலட்சம் ரூபா பெறுமதியுடையதெனவும் மன்னார் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் விசாரணை மேற்கொளளப்பட்டு வருவதாகவும் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் மன்னார் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# 13 வைத்தியர்களுக்கு சேவை நீடிப்பிற்கான அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் 60 தொடக்கம் 67 வயதிற்கு இடைப்பட்ட 13 வைத்தியர்களுக்கு சேவை நீடிப்பினை வழங்குவதற்கு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி அனுமதி வழங்கியுள்ளதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

67 வயதிற்கு மேற்பட்ட வைத்தியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட மாட்டாதென வடமாகாண பொதுச்சேவை ஆணைக்குழு தெரிவித்த நிலையில், இந்த வைத்தியர்களின் சேவையை நிறுத்துவதனால், குடாநாட்டில் ஏற்படவுள்ள வைத்தியர் பற்றாக்குறை தொடர்பாகவும், அதனால் மக்கள் எதிர்நோக்கவுள்ள பிரச்சினை குறித்தும், பிராந்திய சுகாதார சேவைகள் (15 ஆம் பக்கம் பார்க்க)

# விபத்தில் காயமடைந்த வயோதிப பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பகுதியில் மோட்டார் சைக்கிளுடன் துவிச்சக்கர வண்டி மோதியதில் வயோதிபப் பெண் தலையில் படுகாயமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுக் காலை 11.00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த சரஸ்வதி (வயது - 76) என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தவராவார். விபத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட அவர் உயிரிழந்துள்ளார்.

இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (எஸ்)

# மக்களின் ஆலோசனைக்கு அமையவே செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும்



(நெடுந்தீவு)

அவசியமான திட்டங்களை முழு மக்களதும் ஆலோசனையுடன் முன்னெடுக்கும் வகையிலான சிறந்த கட்டமைப்பை பிரதேசசபைகள் கொண்டிருக்கும் போதே மக்களது தேவைகளை உரிய காலத்தில் நிறைவேற்றிக் கொடுக்கக் கூடியதாக இருக்குமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்தார். நெடுந்தீவு பிரதேச சபையின் அபிவிருத்தி உபகுழுக் கூட்டம் சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

ஆரம்ப நிகழ்வாக இறந்தவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்திய பின் நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் தானியல் றெக்ஷியன் கூட்டத்தில் வருகை தந்திருந்த சபை உறுப்பினர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களை வரவேற்று உரையாற்றினார். இதனை அடுத்து அபிவிருத்தியை சிறப்பாக முன்னெடுப்பதற்காக மக்களுடன் பிரதேசசபை கொண்டிருக்க வேண்டிய தொடர்பாடலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உரையாற்றிய யாழ் மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது,

திட்டங்களை நாம் வரையறை செய்யும்போது கட்சிக் கமிட்டி மற்றும் உபகுழு என்பவற்றின் ஊடாக பிரதேசசபை உறுப்பினர்களின் கவனத்திற்கு அவற்றை கொண்டு செல்வதன் மூலம் பல கட்டங்களில் அவற்றின் அவசியம் முன்னுரிமை பற்றி தீர அறிந்து கொண்டு அபிவிருத்தியை சிறப்பாக முன்னெடுக்க முடியும்.

திட்டங்களை முன்னெடுக்கும் போது தவறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு பயன்பெறும் மக்களுடன் அத்திட்டத்திற்கான செயன்முறை தொடர்பு படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் முறைகேடுகள் மோசடிகள் துஷ்பிரயோகங்கள் ஏற்படாது பார்த்துக் கொள்ள முடியும்.

நெடுந்தீவில் தற்போது நடைபெறும் வீதி அபிவிருத்திகளை கண்காணிக்கவென குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று ஒவ்வொரு திட்டத்தையும் நடைமுறைபடுத்தும் போது அதற்கான மக்கள் குழுக்கள் அமைக்கப்பட்டு பணிகளை நெறிப்படுத்தும் போதே செயற்பாடுகள் சிறப்பான முடிவைக் கொண்டிருக்கும்.

இந்த நோக்கில் நெடுந்தீவு பிரதேசசபை சிறப்பான செயற்பாட்டை கொண்டிருக்கின்றதென்றால் அது பொதுமக்களாகிய உங்களின் பங்களிப்பு சிறப்பாக தொடர்புபடுத்தப்பட்டிருக்கின்றதென்பதே அதன் அர்த்தமாகும்.

நெடுந்தீவு மக்களுக்காக கடல் மற்றும் வீதிப் போக்குவரத்தில் நிலவும் சிரமங்கள், வீதி அபிவிருத்தி வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள், ஆலய அபிவிருத்தி இறங்குதுறை நிர்மாணம் என்பன உடனடியான திட்டங்களாக எம்மிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

எமது கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா அவர்களின் வழி காட்டலின் கீழ் சில திட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். அதேபோல் அனைத்து திட்டங்களையும் விரைவில் நாம் நிறைவேற்றிக் கொடுப்போமென அவர் உறுதியளித்தார்.

சபைக் கூட்டத்தின் போது படகுச் சேவைகளுக்கான கால அட்டவணையை சீர் செய்து தருமாறும் சீரற்ற பஸ் சேவையை மீள ஒழுங்கு படுத்தவேண்டியதன் அவசியத்தையும் கூட்டத்தில் கலந்து கொண்டோர் வலியுறுத்தினர்.

# திருமறைக் கலாமன்ற தினம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்ற தினம் நாளை சனிக்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனை முன்னிட்டுப் பல்வேறு வகையான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நாளை காலை 7.00 மணிக்கு மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் நன்றி வழிபாடும், மாலை 4.00 மணிக்கு கலை நிகழ்ச்சிகளும், காலை 9.30 மணிக்கு கலைத்தூது மணிமண்டபத்தில் இரத்ததானம் வழங்கும் நிகழ்வும் இடம் பெறும்.

மாலையில் இடம்பெறவுள்ள கலை நிகழ்ச்சிகளுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனும், சிறப்பு விருந்தினர்களாக பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இதில் நடனங்கள், நாடகம், பாட்டு, கவியரங்கம், கலைஞர் கௌரவிப்பு ஆகிய நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (52)

## அகமகிழ் விழா

(யாழ்ப்பாணம்)

பிரதேச செயலகங்களுக்கிடையிலான தேசிய முகாமைத்துவப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்ற கரவெட்டி பிரதேச செயலகத்தை வாழ்த்தும் முகமாக 'அகமகிழ்விழா' நாளை காலை 9.00 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வதுடன், ஏற்புரையை கரவெட்டி பிரதேச செயலாளர் பி.சத்தியசீலன் நிகழ்த்தவுள்ளார். (116)


## சிறு விளம்பரம்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)

## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முனகூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1400)


# சின்னஞ்சிறு செய்திகள்

## அறிவுறுத்தல் கூட்டம்

(பருத்தித்துறை)

க.பொ.த(சா/த) பரீட்சை வலயம் - II இற்கான அறிவுறுத்தல் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் இணைப்பாளர், உதவி இணைப்பாளர்கள், பரீட்சை நோக்குநர்கள், மேற்பார்வையாளர்கள், உதவி மேற்பார்வையாளர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (06)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா தனது 40 வருட பொலிஸ் சேவையைப் பூர்த்தி செய்வதை இட்டு சேவை நலன் பாராட்டு விழா ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் தலைமையகத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்ளவுள்ளார். (எப்.எஸ்)

## பரிசளிப்பு விழா

(பருத்தித்துறை)

தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய ஜுபிலி பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு வித்தியாலய அதிபர் க.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (உ-109)

## விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையால் நடத்தப்படும்* மக்கள் பங்கேற்புடனான கலந்துரையாடலில் ஜே/69, ஜே/107 கிராம சேவையாளர் பிரிவுகளின் கிராம அபிவிருத்தி திட்டமிடல் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இதில் ஜே/69 பிரிவிற்கான கூட்டம் காலை 9.00 மணிக்கு குருநகர் சனசமூக நிலைய கட்டடத்திலும், ஜே/107 பிரிவிற்கான கூட்டம் பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் தமிழ் பெண்கள் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது.

எனவே இக்கூட்டத்தில் கிராம மக்கள் பங்குபற்றி தங்கள் பிரிவின் கிராம அபிவிருத்திக்கான ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ்.மாநகர முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார். (உ)

## வீதி விபத்தில் மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிப்பர் வாகனத்தை விலத்திச் செல்ல முற்பட்டபோது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் சிறுவன் ஒருவன் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

தெல்லிப்பளை 8 ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் அதேஇடத்தைச் சேர்ந்த ரமேஷ் துஷாந் (வயது-9) என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

விபத்தில் இச்சிறுவனின் கால் முறிந்துள்ளதுடன் பற்களும் உடைந்த நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். (எஸ்)

# வேகமாகப் பரவும் பாலியல் நோய்கள் யாழ்.குடாவைத் தாக்கும் அபாயம்


## சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

யாழ்.குடாநாட்டில் நிலவும் தற்போதைய சூழலில் பாலியல் நோய்கள் அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம் இருப்பதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் எச்சரிக்கை வெளியிட்டுள்ளார்.

உலக எயிட்ஸ் நோய் தினமான நேற்று யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிலைய மண்டபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த எயிட்ஸ் நோய் பற்றிய விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு தலைமையுரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இன்றைய இளைய தலைமுறையினர் இணையத்தளம் வாயிலாகப் பல்வேறுபட்ட விடயங்களைப் பார்வையிடுகின்றன. பாலியல் சம்பந்தமான விடயங்களும் அவ்வாறு அவர்களுக்கு தடையின்றிக் கிடைக்கின்றன. இதனால் யாழ்.குடாநாட்டில் பாலியல் நோய் தீவிரமடையக் கூடிய நிலை தென்படுகின்றது. அது தவிர, இளவயதினரின் மது, போதைவஸ்து பாவனை தென் பகுதியில் இருந்து வடபகுதிக்கும் வடபகுதியில் இருந்து தென் பகுதிக்கும் பலர் சென்று வருகின்றனர்.

இவ்வாறு சென்று வருபவர்கள் தவறான நடத்தைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். என்ற தகவலும் கிடைத்திருக்கிறது. அது தவிர வெளிநாடுகளில் இருந்து இங்கு வருபவர்கள் மூலமாகவும் இவ்வாறான நோய்கள் பரவக்கூடிய சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. யுத்த காலச் சூழ்நிலைக்குப் பின்பாக எமது சமூகக் கட்டமைப்பு பலமிழந்திருக்கிறது. இவ்வாறான காரணிகளால் பாலியல் நோய்கள் வெகுவாக அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. எனவே தான் இவ்விடயம் குறித்து விழிப்புணர்வு நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். இதன் மூலம் இந்நோய்களைக் கட்டுப்படுத்த சகலரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



மக்கள் வங்கியின் 50 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று ஆயிரம் ரூபா நாணயக் குற்றி வெளியிடப்பட்டது.

மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ்.பத்மநாதன் நாணயக்குற்றியை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியிடம் கையளிப்பதைக் காணலாம்.

சொர்க்கத்தைத் தேடிப்போகவேண்டியதில்லை. கட்டுப்பாடான வாழ்க்கை, நல்லொழுக்கம், பிறரிடம் காட்டும் அன்பு, உதவி இவற்றால் கிடைக்கும் மன நிறைவே சொர்க்கம்.

- பாபா -

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## நமது வாழ்க்கையின் திறப்பு நம்மிடமே!

கொழும்பு – காலி அதிவேக நெடுஞ்சாலையைத் திறந்து வைத்து உரையாற்றும் போது, சாலைகள் மூலம் நாட்டில் நல்லிணக்கம் உருவாக்கப்படுவது பற்றி ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். எந்த வகையிலேனும் நல்லிணக்கம் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அரச தரப்பு தீவிரமாக உணர்ந்திருப்பதன் அடையாளமாக இதைப் புரிந்து கொள்ளலாம்.

ஏனெனில், ஜனாதிபதியின் பேச்சில், பிரிவினைவாதம் இன்னும் முடிவடைந்து விடவில்லை என்பதையும் குறிப்பிட்டுள்ளார். போர் முடிந்ததோடு இந்நாட்டில் பிரச்சினைகள் எல்லாம் முடிந்து விட்டதாக அர்த்தமில்லை என்பதை அரசாங்கம் வெளிப்படுத்தியிருப்பது முக்கியமானதாகும். பிரிவினைவாதம் முழுமையாகத் தோற்கடிக்கப்பட வேண்டுமானால், நாட்டை ஒன்றிணைக்கும் நெடுஞ்சாலைகள் போல அபிவிருத்தி வேலைகள் முழுவேகத்தில் இடம்பெற வேண்டும் என அரசுத் தலைவர் கூறியிருப்பது இன்றைய நிலையில் நல்ல சமிக்ஞைதான்.

போரில் பாதிக்கப்பட்ட மக்களின் மீளமைக்கப்படும் வாழ்வும், நாட்டின் அனைத்துப் பகுதிகளும் பாகுபாடற்ற வகையில் முன்னேற்றம் காண்பதும், தமிழ் மக்களின் மனோநிலையைப் புரிந்துகொண்ட நல்லிணக்கச் செயற்பாடுகளின் மூலமும்தான் இந்நாட்டில் உண்மையான அமைதியையும் செழிப்பையும் கொண்டுவர முடியும். அதன் மூலம்தான் நாட்டை ஆசியாவின் அதிசயமாகவும் மலரச் செய்ய முடியும்.

உண்மையில் முப்பது வருடங்களாக கொடிய போர் நடைபெற்ற நாட்டில் அமைதிக்கும் சகஜ வாழ்விற்கும் மாறுவது என்பது ஒரே நாளில் நடந்துவிடக்கூடியதல்ல. ஒவ்வொரு கட்டமாக நகர வேண்டும். தற்காலிகமான பல மாற்றங்களைச் சகித்துக் கொண்டிருக்க வேண்டும். அவசரப்பட்டு பழைய கோப வெறுப்புகளைப் புதுப்பித்துக கொண்டிருக்கவோ சாதிக்கவோ முனைந்து பழைய குழிக்குள் விழுந்துவிடக் கூடாது.

மெல்ல மெல்லத்தான் சகலதரப்பு நம்பிக்கையுடனும் மாற்றத்தைக் கொண்டுவந்தாக வேண்டும். உலகில் நாம் மட்டுமே நெருக்கடிகளைச் சந்தித்த மக்களல்ல. அதேசமயம் நமது நெருக்கடிகள் பிரத்தியேகப் பார்வையுடன் அணுகப்பட வேண்டியவையுமாகும்.

உலகின் எல்லாப் பகுதிகளும் ஏதாவது ஒருவகையில் நெருக்கடியில் சிக்கியிருக்கின்றன. ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுககும் பொருளாதாரச் சிக்கல். அமைதி திரும்புவது போல தெரிந்த மத்திய கிழக்கு நாடுகளில் கூட மீண்டும் ஆக்ரோஷமான கிளர்ச்சிகள் தொடங்கியிருக்கின்றன.

பொஸ்னி முபாரக் பதவி விலகியதும் எகிப்தில் எதிர்பார்க்கப்பட்ட ஜனநாயக மாற்றம், இன்னும் வந்துவிடவில்லை. சில மாதங்களுக்கு முன்னால், முபாரக்குக்கு எதிராகப் போராடியவர்கள் இப்போது ராணுவத்துக்கு எதிராகப் போராட வேண்டியதாகிவிட்டது. தலைநகர் கெய்ரோவின் தஹ்ரீர் சதுக்கம் மீண்டும் முற்றுகையிடப்பட்டிருக்கிறது.

லிபியாவில் கடாபியின் சர்வாதிகார ஆட்சிக்கு எதிராகப் போராடியவர்கள் பற்றி இன்று வரும் தகவல்கள் மகிழ்வளிப்பவையாக இல்லை. மக்களுக்கெதிரான அவர்களது செயற்பாடுகள் குறித்து மக்கள் வாய்திறக்கிறார்கள். புரட்சிப் படையாகச் சொல்லிக் கொண்டவர்களின் ஏகாதிபத்தியச் சார்பும் இனவாத நடவடிக்கைகளும் துலங்குகின்றன.

ஒரு நாட்டில் புரட்சி நடந்து மக்களாட்சி ஏற்பட்டு விட்டது என்பதற்காக எல்லா நாட்டிலும் அதே முறையைப் புகுத்திவிட முடியாது. அதேபோல்தான் போராடிய மக்கள் தொடர்ந்தும் போரைச் சுமந்துகொண்டிருக்கவும் முடியாது. ஒவ்வொரு நாடும், அதன் மக்களும் அவர்களுக்குரியதான தனித்துவ முறைகளைக் கையாளாவிட்டால், ஜனநாயகச் சூழலை நோக்கிய முயற்சிகளில் வெற்றி பெற முடியாது.

ஏதோ ஒரு மூலையில் அரசியல், பொருளாதார நெருக்கடி ஏற்பட்டாலும் அதன் வேதனையை உலகின் ஒவ்வொருவரும் அனுபவிக்க வேண்டிய கட்டாயம் கொண்ட காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் மட்டுமே தனியாக வருந்திச் சுமை சுமப்பவர்களல்ல. நெருக்கடிகளில் இருந்து தப்பிக்க சிறப்புக் கவசம் வெளியிலிருந்து கிடையாது. நமக்குள்ளேதான் நமது சமாதான வாழ்விற்கான விடைகளும் உள்ளன. வாழ்வை மாற்றுவதற்கு நாம் மாறியாக வேண்டும்.

- ஆசிரியர் -

# மூடப்படும் நிலையிலுள்ள 195 பாடசாலைகளை இரு வருடங்களில் சீர் செய்ய நடவழக்கை

## -வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

இலங்கையில் 1000 பாடசாலைத் திட்டமானது தற்போது நடைமுறைப்படுத்தப்படுகிறது. குறிப்பிட்ட சில பாடசாலையை அரசாங்கம் தெரிவு செய்து அதற்கான பௌதீக, ஆளணி வளங்களை வழங்கி மிகச் சிறந்த மாணவர்களை உருவாக்குவதே இதன நோக்கமாகும். இதனடிப்படையில் வடமாகாணத்தில் 125 பாடசாலைகள் இத்திட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக ஆளுநர் அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடமாகாணத்தில் முழுமையாக 1031 பாடசாலைகள் உள்ளன. இதில் 910 பாடசாலைகளே தற்போது இயங்கி வருகின்றன. இதில் 195 பாடசாலைகள் 50 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்டு இயங்குகின்றது. இவற்றை சீர்செய்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியபோது 2 வருட திட்டத்தை வழங்கியுள்ளார். அதனடிப்படையில் அது சீர்செய்யப்படவுள்ளது.

இதனைவிட பாடசாலைகளின் அபிவிருத்தியைக் கருத்திற்கொண்டு புதிதாக 1500 கணினிகள் வழங்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட சில பாடசாலைகளுக்கு ஒரு இலட்சம் காசு அபிவிருத்தி நிதியாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் 80 பாடசாலைகள் இந்திய நிதித்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (12)

# வறியவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தப் பாடுபடுகின்றோம்

## - யாழ். மாவட்டக் கட்டளைத்தளபதி



(வடமராட்சி)

வடமராட்சி கரவெட்டி பகுதிகளில் 521 படைப்பிரிவினர் மக்களோடு மக்களாக பழகி அப்பகுதியில் வாழுகின்ற வறுமைக் கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் உயரிய நோக்கத்தோடு தம்மை அர்ப்பணித்து சேவை செய்வதை பாராட்டுகிறேன். என யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் அனுசரணையில் வடமராட்சி இராணுவத் தலைமையகத்தினரின் ஏற்பாட்டில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற முதியோருக்கான மூக்குக்கண்ணாடி வழங்கல் மற்றும் கண் பரிசோதனை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த காலங்களில் இடம்பெற்ற கசப்பான வாழ்க்கையை துரதிஷ்டவசமாக பார்க்கவேண்டும் அப்போதுதான் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி இன மத வேறுபாடுகள் இல்லாமல் அபிவிருத்திப் பாதையில் பயணிக்க முடியும்.

அபிவிருத்தி லொத்தர் சபையின் இத்தகைய செயற்பாடுகள் கரவெட்டிப் பிரதேச மக்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

சுபீட்சமான வாழ்வில் நாம் செல்வதன் ஊடாக எமது தமிழ் பேசும் மக்களுக்கும் நாம் ஒத்துழைப்பாகவும் வழிகாட்டிகளாக என்றும் பக்கபலமாக நாம் இருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் யலத் ரவிதிசாநாயக்க, 52 ஆவது கட்டளைத்தளபதி மேஜர் அனுரசுபசிங்க, 521 படைப்பிரிவின் கேணல் டிக்கிரி திசநாயக 51 ஆவது கட்டளைத்தளபதி லெப்டினன் கேணல் அபயசிங்க, நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ். சேதுராசா வல்லிபுர ஆழ்வார் அறங்காவலர் சபைத்தலைவர் ரி.அன்னலிங்கம் மற்றும் மதகுருமார்கள் பாடசாலை மாணவர்கள் வடமராட்சி இராணுவ கொமாண்டோக்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (உ-116)

## ஆலோசனைக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த விளையாட்டுக் கழகத்தின் முக்கியமான ஆலோசனைக் கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பி.ப.3 மணிக்கு சா/ இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் விளையாட்டுத் துறையை மேம்படுத்தும் ஆர்வமுள்ள பாடசாலை மாணவர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்களைக் கலந்துகொண்டு தகுந்த ஆலோசனை வழங்கும்படி கழகத் தலைவர் அ.கயிலாயபிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார். (11)

## நீண்டகாலமாக திருத்தப்படாத புத்தூர் கிழக்கு பெரியதம்பிரான் வீதி

வலி.கிழக்குப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட புத்தூர் கிழக்கு பெரிய தம்பிரான் வீதி குண்டும்,குழியுமாகக் காணப்படுவதால் அவ்வீதியுடாகப் பயணம் செய்ய முடியாத நிலை காணப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதயிலிருந்து புத்தூர் கிழக்கு நோக்கிச் செல்லும் இவ்வீதி மிக நீண்டகாலமாகத் திருத்தப்படவில்லை. இது குறித்து பிரதேச சபையினர் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இப்பகுதி மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பிரதான வீதிக்குச் செல்வதற்கு இவ் வீதியை பயன்படுத்தி வருகின்றனர். குறிப்பாக இப்பகுதி விவசாயிகள் தமது விளை பொருட்களை இவ்வீதியூடாகவே சந்தைப்படுத்துவதற்கு எடுத்துச் செல்கின்றனர். இப்படியாக போக்குவரத்து அதிக பயன்பாடுள்ள இவ்வீதி மிக நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருப்பது கவலையளிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக தற்போதைய மழையினால் வீதியில் உள்ள மண் அரித்துச் செல்லப்பட்டு கற்கள் வீதியில் அங்குமிங்கும் சிதறிக் காணப்படுகிறது. இதனால பல விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுவதுடன் பலர் தமது சைக்கிள் மோட்டார் சைக்கிள்களை உருட்டிச் செல்கின்ற பரிதாப நிலையைக் காண முடிகிறது. எனவே சம்பந்தப்பட்ட பிரதேச சபை இவ்வீதியைப் புனரமைத்துத்தர வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (54)

# குடாநாட்டு நிலைமைகளை ஆராய வெளிநாட்டு பிரதிநிதிகள் வருகை

(யாழ்ப்பாணம்)

யுத்தத்திற்குப் பிந்திய யாழ். குடாநாட்டின் நிலைமைகளை அறிவதற்காக இம்மாத முற்பகுதியில் அவுஸ்ரேலியா மற்றும் நோர்வே நாட்டின் தூதரகப் பிரதிநிதிகள் யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள நோர்வேத் தூதரகப் பிரதிநிதிகள் யாழ்.செயலகத்திற்கு அன்றைய தினம் முற்பகல் 11.15 மணிக்கு விஜயம் செய்து யாழ்.அரச அதிபரைச் சந்திக்கவுள்ளனர்.

இதேவேளை, எதிர்வரும் 13ஆம் திகதி யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்யவுள்ள அவுஸ்ரேலிய நாட்டின் உயர்ஸ்தானிகராலயப் பிரதிநிதிகள் அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு யாழ் செயலகத்திற்கு விஜயம் செய்து யாழ். அரச அதிபரிடம் கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர் எனவும யாழ்.செயலக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நேற்றைய தினம் அமெரிக்க மற்றும் பிரிட்டன் தூதரக அதிகாரிகள் யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து யாழ்.அரச அதிபர் மற்றும் பல தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு வெளிநாட்டு உயர் ஸ்தானிகராலயப் பிரதிநிதிகளின் பார்வை யாழ்.குடாநாட்டின் மீது திரும்பியிருப்பதாக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். (பா)

# சமூக விழுமியங்களை கல்வியின் மூலம் பெறமுடியும்

## யாழ்ப்பாணம் பிரம்ம குமாரிகள் நிறுவன அமைப்பாளர்

(வலிகாமம்)

சமூகத்திற்குத் தேவையான விழுமியங்களை உடைய மனிதனை உருவாக்குவது கல்வியாகும். அத்தகைய விழுமியங்களை வழங்காத கல்வியில் சமூகப் பயன்பாடுகள் எதுவுமில்லை மற்றும் தனிமனித ஆளுமை விருத்திகளும் ஏற்படுவதில்லை என யாழ்ப்பாணம் பிரம்ம குமாரிகள் நிறுவனத்தின் அமைப்பாளர் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வடமாகாண கல்விப் பணிமனையின் கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாண பிரம்மகுமாரிகள் நிறுவனத்தின் விழுமியக் கல்வி தொடர்பான கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கல்வி எனும் சொற்பதத்தில் மனிதனுக்கு வேண்டிய விழுமியங்களான வலுச்சேர்த்தல், நல்லொழுக்கம், ஒற்றுமை, படைப்பாற்றல், விழிப்புணர்வு, சகிப்புத் தன்மை அகநோக்கு, நல்லவற்றை பார்த்தல், கம்பீரமாக காட்சியளித்தல் போன்றன உள்ளடக்கப்படுகிறது.

இத்தகைய பண்புகளை உடைய கல்வியே மனிதனை முழுமையுள்ள மனிதனாக மாற்றுகிறது. ஒவ்வொருவரும் கல்வியை அவ்வவ் காலத்தில் கற்கவேண்டும்.

வாழ்க்கை கணிதம் போன்றது. மைனஸ்சும் இருக்கும். பிளஸ்ூம் இருக்கும். எமது சிந்தனைகள் நேர்மையுடையனவாக இருக்கவேண்டும். தீயவற்றை விலக்கி, நல்லவற்றை மட்டும் வாழ்க்கையில் எல்லோரும் கடைப்பிடிப்பார்களானால் அத்தகைய வாழ்க்கை ஆரோக்கியமானதாக அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் வலிகாமம் கல்வி வலய உத்தியோகத்தர்கள், வடமாகாண கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள், யாழ். பிரம்மகுமாரிகள், நிறுவன அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (06)

## யாழ். பிரதேச கலாசார பேரவையின் அபிவிருத்திக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டம் கடந்த திங்கட்கிழமை மாலை யாழ். பிரதேச செயலக பிரதான மண்டபத்தில் பேரவையின் தலைவர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது.

பேரவைத் தலைவரின் தலைமை உரையில் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் அபிவிருத்தி மட்டும் அல்ல யாழ். பிரதேசத்தின் கலாசார விழுமியங்களையும், விளையாட்டையும் அபிவிருத்தி செய்தல் ஆகும்.

இதன் அங்கமாக கலாசார விழா அண்மையில் திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் சிறப்பாக நடைபெற்றது எனக் கூறினார்.

மேலும் கலாசார மலரும், யாழ். பிரதேச கலைஞர்களின் விபரத்திரட்டு வெளியிடும் நாள் நெருங்கியுள்ளன. ஆனால், இதற்கான ஆக்கங்களும், கலைஞர் விபரத்திரட்டையும் அனுப்புவதில் அங்கத்தவர்கள் கவனம் எடுக்கவில்லை எனவும் சுட்டிக் காட்டப்பட்டது.

மலருக்காக கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகளின் புகைப்படங்களும் அதன் வரலாற்றையும் கலைஞர்கள் அவரவர் புகைப்படத்துடன் விபரத்திரட்டையும் அவசரமாக அனுப்பிவைக்கும்படி கேட்டுள்ளார்.

நடைபெற்ற கலாசார விழா, வெளியிடப்படவிருக்கும் கலாசாரமலர் பற்றிய கருத்துரையை இரா. செல்வவடிவேல் வழங்கினார்.

பேரவையின் செயலாளரும், கலாசார உத்தியோகஸ்தருமாகிய சு. கந்தவேல் வரவேற்பையும், நன்றியுரையையும் மேற்கொண்டனர். (105)

## வீரசிங்கம் சிலை இடமாற்றம்; கூட்டுறவாளர்கள் அதிர்ச்சி

### பத்திரிகைச் செய்திகளின் எதிரொலி

(மானிப்பாய்)

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முன்றலில் வைக்கப்பட்டுள்ள கூட்டுறவுப் பெரியார் அமரர் வீரசிங்கத்தின் சிலையை வேறு இடத்திற்கு மாற்றுவது தொடர்பாக பழம் பெரும் கூட்டுறவாளர்களும், கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகிகளும் அதிர்ச்சியும் விசனமும் வெளியிட்டுள்ளனர்.

வடக்கையும், கிழக்கையும், தெற்கையும் புனிதமான கூட்டுறவு இயக்கத்தினால் இணைத்த பெருமைக்குரிய அமரர் வீரசிங்கத்தின் 47ஆவது நினைவு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில் அவரின் சிலையை தேவைக்கேற்ப மாற்றுவதற்கான நடவடிக்கைகளை பிரதேச சபை தவிசாளர் ஒருவர் மேற்கொள்ளப்போவதான பத்திரிகைச் செய்தியினால் கூட்டுறவுச் சமூகம் கொதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக குறித்த சங்கத் தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது, அமரர் வீரசிங்கத்தின் சிலையை பிறிதொரு இடத்திற்கு மாற்றம் செய்வது தொடர்பாக சங்க நிர்வாகம் தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை என்றும், ஆனால், பத்திரிகையில் செய்தி வந்திருப்பதை தான் அறிந்து கொண்டதாகவும், சிலையை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பவர்கள் எவரும் தன்னுடன் தொடர்பு கொள்ளவில்லை எனவும், அதனை பிறிதொரு இடத்தில் வைப்பதை சங்க நிர்வாகம் அனுமதிக்கமாட்டாது என்றும் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில்:

அமரர் வீரசிங்கத்திற்கு யாராவது சிலை வைக்க விரும்பினால் தாம் விரும்பிய இடத்தில், சொந்தச் செலவில் சிலையை வைக்கலாம் என்றும், இன்னொருவர் வைத்த சிலையை அபகரிக்க எத்தனிக்கக்கூடாது என்றும் அத்தகைய செயல் கூட்டுறவுக்குச் செய்யும் பெரும் துரோகமாகும் என்றும் தெரிவித்தார்.

## அறிவுறுத்தல் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. (சா/த) பரீட்சை - 2011 இல் கடமையாற்றும் பரீட்சை அலுவலர்களிற்கான அறிவுறுத்தல் கூட்டம் யாழ். வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் கோப்பாய்க் கோட்டம் தவிர்ந்த யாழ்ப்பாண வலயம், தென்மராட்சி வலயம் மற்றும் தீவக வலயத்தைச் சேர்ந்த இணைப்பு நிலைய அலுவலர்கள், உதவி இணைப்பு நிலைய அலுவலர்கள், பரீட்சை நிலைய மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள் ஆகியோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (உ)

## சிவாஜினி முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் கல்விக் கோட்டத்திற்குட்பட்ட, கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம், தரம் 13 மாணவி செல்வி எஸ். சிவாஜினி கொழும்பு பங்குச் சந்தை ஆணைக்குழுவினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட வினாவிடைப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றதுடன் ரூபா 60 ஆயிரம் பணப் பரிசையும் பெற்றுள்ளார்.(136)

## பிரதேச செயலகத்தில் ஊழியரின் கைப்பை திருட்டு

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் பெண் ஊழியர் ஒருவரின் கைப்பை ஒன்று பிரதேச செயலகத்தில் வைத்து திருடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற இத்திருட்டுச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:

சம்பவ தினம் காலை இடைக்காடு,வளலாய்ப் பகுதிகளில் மீள் குடியேற்றம் செய்யப்படுவோரின் காணிப்பதிவுகளும், இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் நிகழ்வுகள் இடம்பெற்றமையால் பெருமளவு மக்கள் அங்கு கூடியிருந்ததாகவும் அப்போதே குறித்த பெண் ஊழியரின் கைப்பை திருட்டுப்போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பெண்ணின் கைப்பையில் வங்கிப் புத்தகங்களும், தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை மற்றும் ரொக்கப் பணமும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிறுவனத்தின் வலுவிழந்தோர் தின போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு யாழ் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தினால் பயனாளிகளிடையே நடத்தப்பட்ட பாவனைத் திறன், கட்டுரை, தையற் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களது விபரம் வருமாறு:

70 வயதுக்கு மேற்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட செயற்கை உறுப்புக்களின் பாவனைத் திறன் மீளாய்வுப் போட்டி

வே. சின்னத்தம்பி (அரசடி வீதி, கட்டுடை, மானிப்பாய்), க. புவனேஸ்வரன் (ஏழாலை வடக்கு, ஏழாலை), க. மகேஸ்வரி (உடையார்கட்டு, முல்லைத்தீவு)

கட்டுரைப் போட்டி

கி. டனுஸன் (யாழ். வட்டு மத்திய கல்லூரி), அ. டிலக்சிகா (யாழ். மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), உ. கபினா (யாழ்./ஆனைபந்தி அ.மி.த.க. பாடசாலை)

மத்திய பிரிவு

து. சிந்துஜா (யாழ். அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்), லோ. ரகீலன் (யாழ். பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயம்), வி. தனுசியன் (யாழ். இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்)

மேற்பிரிவு

கு. மிதுசா (யாழ். உடுவில் மகளிர் கல்லூரி), இ. கம்ஸா (கிளி. பூநகரி மகா வித்தியாலயம்), அ. யுனிஸ்ரெலா (யாழ். நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்)

தையற் போட்டி

வி. ஜெயமேரி (அல்வாய் வடமேற்கு, அல்வாய்), க. சியாமளா (ஈவினை கிழக்கு, புன்னாலைக்கட்டுவன்), வ. நிர்சாந்தினி (நாவற்காடு)

இவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் வைபவம் இவ்வருடம் சர்வதேச வலுவிழந்தோர் தினமான நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் ஜெயப்பூர் நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி வெற்றியாளர்கள் அனைவரும் தவறாது சமூகம் தந்து தங்களுக்குரிய பரிசில்களையும், சான்றிதழ்களையும் பெற்று நிகழ்வைச் சிறப்பிக்குமாறு நிறுவன பதில் தலைவர் ச.குணரெத்தினம் தெரிவித்துள்ளார். (உ)



வடமாகாணத்தில் 50 இற்குக் குறைந்த பாடசாலைகளுக்கான அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு அண்மையில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றபோது, வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி உரையாற்றுவதையும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் செயலமர்வை நடத்துவதையும் கலந்துகொண்ட பாடசாலை அதிபர்களையும் காணலாம்.

# குடித்தொகை மதிப்பீடு நிறைவுற்றதும் கிராம அலுவலர்கள் உள்ளக இடமாற்றம்



(யாழ்ப்பாணம்)
மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற குடித்தொகை மதிப்பீடுகள் நிறைவுற்றதும் கிராம அலுவலர்களுக்கான உள்ளக இடமாற்றங்களை மேற்கொள்ளவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக சில கிராம அலுவலர்கள் ஒரே பிரிவில் கடமையாற்றி வருகின்றதாலும் சில கிராம அலுவர்களின் செயற்பாடுகள் மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளமை தொடர்பிலும் எமது செய்தியாளர் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் சில கிராம அலுவலர்கள் தொடர்பில் எமக்கு நிறைய முறைப்பாடுகள் மக்களிடம் இருந்து கிடைக்கப் பெறுகின்றன.

எனவேதான் கிராம அலுவலர்களுக்கான உளளக இடமாற்றத்தை மேற்கொள்ள தீர் மானித்துள்ளோம் இருப்பினும் தற்போது மாவட்டத்தில் இடம்பெற்று வருகின்ற குடித்தொகை மதிப்பீடு தடையாகவுள்ளது.

எனவே குடித்தொகை மதிப்பீடு ஒரு சில மாதங்களுக்கு நிறைவுற்றதும் உடனடியாகவே உள்ளக இடமாற்றத்தை மேற்கொள்ளவுள்ளோம் என அரச அதிபா மேலும் தெரி வித்துள்ளார்.

# செஞ்சிலுவைத் தொண்டர் கௌரவிப்பு விழா

(வடமராட்சி)
இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் வடக்குப் பிரிவின் தொண்டர் கௌரவிப்பு விழா நாளை சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பிரிவுத் தலைவர் சி.நாகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளைத் தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கம் பிரதம விருந்தினராகவும், வலிகாமம் வடக்கு பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவகு மாரன், இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக்கிளைச் செயலாளர் கு.பாலகிருஸ்ணன், தேசிய இளைஞர் சேவைமன்ற உதவிப் பணிப்பாளர் த.ஈஸ் வரராசா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# இசையாராதனையும் நூல்வெளியீடும்

(யாழ்ப்பாணம்)
சங்கீத பூஷணம் கலாபூஷணம் லயனல் திலகநாயகம் போலின் ஈராண்ட நினைவு இசையாராதனையும், நூல் வெளியீடும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 9 மணிமுதல் மாலை 2.00 மணி வரையும் நடைபெறவுள்ளன.

இசையாராதனையில் செல்வி வேதாசினி நந்தகுமார், திருமதி குமுதா உமாகாந்தன், திருமதி சுகன்யா அரவிந்தன் ஆகியோரின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

இசையாராதனையைத் தொடர்ந்து 'தமிழோடு இசை பாடல்' நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. ஓயவு பெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில், ஆசியுரையினை நல்லை யாதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் வழங்கவுள்ளார்.

நூல்வெளியீட்டினை முன்னாள் பேராயர் கலாநிதி, சு.ஜெபநேசன் அடிகள் மேற்கொள்ளவுள்ளார். முதற்பிரதியை சங்கீத வித்துவான் உ.சிவஞானராசா பெறவுள்ளதுடன் நூல் நயப்புரையினை கவிஞர் சோ.பத்மநாதன் ஆற்றவுள்ளார்.

அத்துடன், 'கிறிஸ்து கானம்' இறுவெட்டு வெளியீடும் இடம்பெறவுள்ளது. இதனைக் கலாநிதி க.குணராசா வெளியிட்டு வைக்கவுள்ளதுடன் முதற்பிரதியை சங்கானைப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.புத்திரசிகாமணி பெறவுள்ளார். (உ-06

# பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் காங்கேசன்துறையில் திறப்பு



(யாழ்ப்பாணம்)
கடந்த முப்பது வருட காலமாக வலி வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் இயங்கிய காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு தற்போது மல்லாகம் சந்திக்கு அண்மையாக மல்லாகம் நீதிமன்ற வீதியில் இயங்கத் தொடங்கியுளளது.

நீண்ட கால இடைவெளியின் பின்னர் மீண்டும் மக்கள் மத்தியில் மக்களுடைய நன்மை கருதி நேற்றுமுன்தினம் புதன்கிழமை காங்கேசனதுறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை பிரதம அதிதியாக கலந்துகொண்ட சிரேஸ்ட பொலிஸ் மா அதிபர் காமினி சில்வா சுன்னாகம் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி வலி. வடக்குப் பிரதேச செயலாளர் எஸ்.முரளிதரன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கமகே, வட மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் வி.இந்திரன், காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரெரா மற்றும் திருமதி ச.சபாநாதன உட்பட மற்றும் பலர் ஏற்றிவைத்தார்கள்

இதனைத் தொடர்ந்து இந்து பௌத்த கிறிஸ்தவ மதகுருமார்களின் ஆசியுரைகள் இடம்பெற்றன. காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகரின் அலுவலகத்தை சிரேஸ்ட பிரதிப் பொலிஸ மா அதிபர் காமினி சில்வா திறந்து வைத்தார்.

# மணியந்தோட்டம் மக்கள் மழையால் இடப்பெயர்வு

(யாழ்ப்பாணம்)
கடந்த சில தினங்களாகப் பெய்த பெருமழை காரணமாக ஜே(89) கிராம அலுவலர் பிரிவில் உள்ள மணியந் தோட்டத்தல் மீளக்குடி யேறியுள்ள குடும்பங்கள் வெளியேறி நண்பர்கள், உறவினர்கள் வீடுகளில் தங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மணியந்தோட்டப் பகுதிகளில் 2, 3, 4, 5, 6 ஆம் குறுக்குத் தெருக்களில் உள்ள குடும்பங்களே இவ்வாறு வெளியேறியுள்ள குடும்பங்களாகும்.

இப் பகுதிகளில் உள்ள வெள்ள நீரை வெளியேற்றும் முயற்சிகளில் ஈ.பி.டி.பி நல் லூர் பிரதேச அமைப்பாளரும் நல்லூர் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான அ.ரவீந்திரதாசன் அனர்த்த முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி, நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், திட்டப் பணிப்பாளர் சுரேந்திரநாதன், கிராம அலுவலர் என்.ஞானேந்தரன், இராணுவ அதிகாரி லெப்டினட் பண்டார ஆகியோரின் உதவியுடன் 'பைக்கோ' இயந்திரததின் மூலம் வெள்ளத்தை வெளியேற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, வெள்ளத்தினால் பாதிப்புற்ற உதயபுரம், மணியந்தோட்டப் பகுதி குடும்பங்களுக்கு தறப்பாள்கள் வழங்கவும், மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சிகளிலும் அவர் ஈடுபட்டுள்ளதுடன், அவர்களுக்கு 'சோலர்' மூலமான மின்சாரம் வழங்குவதற் கும் உரிய நடவடிக்கைகளை யும் அவர் முன்னெடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டுறவு ஸ்தாபகரின் 47 ஆவது நினைவு தினம்

(யாழ்ப்பாணம்)
கூட்டுறவுப் பெரியார் அமரர் வி.வீரசிங்கம் அவர்களின் 47 ஆவது நினைவு தினம் எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ் மாவட்ட கூட்டுறவு சபைகளின் ஏற்பாட்டில் அதன் தலைவர் இ.இராஜாராம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம விருந்தின ராகவும், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் பத்து ரனவக்க கௌரவ விருந்தினராகவும், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், கலந்துகொள்ளவுள்ளனர்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

02.12.2011 –வெள்ளிக்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 16 ஆம் நாள்.
இராகுகாலம் 10.45-12.15, சுபநேரம் 6.15 -7.45 வரை
நட்சத்திரம்: சதயம் பி.இ . 3.31 வரை
திதி: ஸப்தமி காலை 6.52 வரை.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

**மேடம்:**– பணம் வரும், சங்கடமான நிலைமை, முகங் கோணுதல், இனசன உதவி, தேக சுகம்.

**ரிஷபம:**– எதிர்பாராத உறவு, காசுக் கஷ்டம், வீணான கவலை, வாக்குவாதம், கடன்படுதல்.

**மிதுனம் :**– பணம் வரும், வீண் சர்ச்சை, முயற்சி தோல்வி, காரியத்தடை, தேகம் பலவீனம்.

**கடகம்:**– சகோதரர் பகை, பணக் கஷ்டம், தெருவில் விபத்து, சங்கடமான நிலைமை, தேக சுகம்.

**சிம்மம்:**– காசு வரும், தொழில் விருத்தி, காரிய சித்தி, எதிர்பாராத புதுஉறவு, வேண்டாத செயல்.

**கன்னி :**– சுபகாரியப் பேச்சு. காசுக் கஷ்டம், வேலைப்பளு, கடன் வாங்குதல், தேகம் ஆரோக்கியம்.

**துலாம் :**– பணக் கஷ்டம், விருந்தினர் வருகை, வீண் சந்தேகம், மனச் சலிப்பு. தவறான முடிவு.

**விருச்சிகம்:**– சகோதர நன்மை, பணம் வரும், தொழிலில் ஆதாயம், முயற்சி வெற்றி, தேகம் சுகம்.


**தனுசு:**– காசுக் கஷ்டம், சங்கடமான நிலை, இனபந்துக்கள் வரவு, தொழில் மந்தம், தேகம் பலவீனம்.

**மகரம:**– குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், சுக காரியச் செலவு, சகோதரர் பகை, தேகம் சுகம்.

**கும்பம் :**– காசுக் கஷ்டம், விருந்தினர் வருகை, வேலைப்பளு, கடின வார்த்தை பேசல், தேகம் பலவீனம்.

**மீனம் :**– குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், அவசர முடிவு, இனசன உதவி, தேகம் சுகம்.

# கிளிநொச்சி மாவட்ட கலைஞர்களுக்கு கலைக்கிளி விருது வழங்கிக் கௌரவிப்பு




கிளிநொச்சி மாவட்டப் பண்பாட்டுப் பேரவை யின் இரண்டு நாள் பண்பாட்டு விழாவின் இறுதி நாள் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டத்தின் 4 பிரதேச செயலகப் பிரிவில் தெரிவு செய்யபபட்ட 12 கலைஞர்கள் "கலைக்கிளி" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்படி கலாபூஷணம் வல்லிபுரம் (சிந்து நடைக்கூத்து), த.ஜென்நாதன் (இசைநாடகம்), சி.இரத்தினம் (நாட்டுக்கூத்து), வ.ஏழுமலைப் பிள்ளை (நாடகம், சினிமா), ச.தில்லைநடராஜன் (நாடகம்). சி.கு.இராசையா (கவிதை), மு.தனபாலசிங்கம் (நாட்டுக்கூத்து), சி.கனகராசா (வாதத்தியக் கருவி), க.ஆறுமுகம் (சிந்து நடைக்கூத்து), க.யோகராசா (தோல் வாத்தியம்), செ.சுந்தரம்பிள்ளை (கிராமியக் கலை), சி.செல்வரத்தினம் (சிந்துநடைக்கூத்து) ஆகிய கலைஞர்களுக்கு வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இவ்விருதினை வழங்கி கௌரவித்தார். (உ, 112)

# தமிழ் மக்களின் கனவுகளை மதிக்காமல் கற்பனைத்தேரில் செல்பவர்களை வரலாறு ஓரத்தில் ஒதுக்கி வைக்கும்

## – நாடாளுமன்றத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



**கௌரவ சபாநாயகர் அவர்களே!....**

இதுவரை கால மனிதகுல வரலாறு யாவும் பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் மாற்றங்களையே கண்டு வந்திருக்கிறது. வியக்கத்தக்க முன்னேற்றங்களையே அடைந்து வந்திருக்கிறது.

இதற்கு, அழகிய எங்கள் இலங்கைத்தீவும் விதிவிலக்கானது அல்ல. இன்று நாம் மாற்றங்களை கண்டிருக்கின்றோம்.

இந்த மாற்றங்கள் கடந்த காலங்களை விடவும் பல முன்னேற்றங்களை அடைந்து வருகின்றது.

மாற்றத்தை விரும்பும் தமிழ் பேசும் மக்களும் தமது உயரிய வாழ்வின் இலட்சியங்களை நோக்கி, அதற்கான பாதையில் அடியெடுத்து வைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

யுத்தமும், இரத்தமுமாக அமைதியற்று, அவலப்பட்டு, இருட்டில் கிடந்த எமது தேசம் இன்று நிம்மதிப்பெருமூச்சு விட்டு நிமிர்ந்து நிற்கிறது.

இப்போது இங்கு பிணங்கள் இல்லை. ரணங்கள் இல்லை. எல்லாமே இங்கு ஒழிந்து முடிந்து விட்டன.

எங்கள் தேசம் தன் கருவறையில் சுமந்திருந்த சமாதானக்குழந்தையை பிரசவித்து விட்டது. சமாதானம் இங்கு பூப்பூத்திருக்கிறது.

நாம் விரும்பும் சமாதானம் என்பது வெறுமனே யுத்தம் இல்லாத பூமி மட்டுமல்ல. இரத்தம் சிந்தாத மனித வாழ்வு மட்டுமல்ல.

சகல இன சமூக மக்களும் அமைதியான எங்கள் இலங்கைத்தீவில் சமவுரிமை சுதந்திரத்தோடு முக முயர்த்தி நிமிர்ந்து நிற்கும் சூழலே நாம் விரும்பும் சமாதானமாகும்.

எமது இலங்கைத்தீவின் ஆட்சியதிகாரத்தில் பங்கெடுத்திருக்கும் ஓர் அமைச்சராக நான் இருப்பினும், தமிழ பேசும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனநாயகப் பிரதிநிதியாகவும், தமிழ் கட்சித் தலைவர்கள் மத்தியில் தமிழ் மக்களின் அதிகூடிய விருப்பு வாக்குகளை பெற்று மக்களின அங்கீகாரத்தை பெற்ற நிலையிலும் இந்த சபையில் நான் நிற்கின்றேன்.

அமைச்சரவை அந்தஸ்து உள்ள ஒரு அமைச்சர் என்ற வகையில் ஒட்டுமொத்த இலங்கைத் தீவின் அரசியல் பொருளாதார சமூக விடயங்கள் குறிததும் பேச வேண்டிய கடமை எனக்குண்டு.

ஆனாலும், 'எமது தமிழ் பேசும் மக்களை தவறான வழிமுறையில் இதுவரை வழிநடத்தி வந்த சுயலாப தமிழ தலைமைகளின் வெறும் கற்பனாவாத சிந்தனைகளை உணர்ந்து, சுயலாப தமிழ் தலைமைகளால் எதையுமே பெற்றுத்தராத, பேரிழப்புகளை மட்டுமே எமது மக்களுக்கு இதுவரை பெற்றுத் தந்த துயரங்களையும், அவலங்களையும் கருத்தில் கொண்டு,தமிழ் பேசும் மக்களுக்கு சரியானதொரு வழிகாட்டலை வழங்க விரும்பி, இந்த சபையில் நான் தமிழ் பேசும் மக்களின் சில பிரச்சினைகள் குறித்தே பிரதானமாக உரையாற்ற விரும்புகின்றேன்.

**கௌரவ சபாநாயகர் அவர்களே!....**

அரசியல் மக்களை பிரித்து வைக்கிறது. பொருளாதாரம் மக்களை ஒன்றிணைக்கின்றது. எமது நாட்டின் தேசிய இனப்பிரச்சினை என்பது பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் இருந்தே தொடக்கி வைக்கப்பட்டது.

இலங்கைத்தீவை ஆட்சி செய்து வந்த காலனியாதிக்கவாதிகளால் திட்டமிடப்பட்ட பிரித்தாளும் சூழ்ச்சியாகவே இது ஆரம்பிக்கப்பட்டது.

1948 ஆம் ஆண்டில் காலனியாதிக்க வாதிகளின் கைகளில் இருந்து எமது இலங்கைத்தீவு விடுவிக்கப்பட்ட நிலையில், அன்றில் இருந்து இலங்கை இந்திய ஒப்பந்தம் வரை மாறி மாறி ஆட்சிக்கு வந்திருந்த அன்றைய அரச தலைவர்களும் தவறானதொரு அரசியல் வழிமுறையினையே தொடர்ந்தும் கடைப்பிடித்து வந்திருக்கிறார்கள்.

சிங்கள சகோதர மக்களுக்கும், தமிழ் முஸ்லிம் மக்களுக்கும் இடையிலான முரண்பாடுகள் திட்டமிட்டு தூண்டி விடப்பட்டன.

ஆனாலும், இவைகள் குறித்து பேசுகின்ற தார்மீக உரிமையினை சுயலாப தமிழ் அரசியல் தலைமைகள் இழந்து விட்டன.

காரணம், தமது தேர்தல் வெற்றிக்காக, வாக்குகளை அபகரிப்பதற்காக இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பினரே தமிழ் இனவாத வெறியை அடிக்கடி ஊட்டி, எமது மக்களை உசுப்பேற்றி விடுவதும், தமிழ் மக்கள் வீதிக்கு வரும் போது, மக்களை நடுத்தெருவில் கைவிட்டு, தமது குடும்பங்களோடு நாட்டை விட்டு ஓடியும் விடுகின்றார்கள்.

அப்பாவி மக்களை பலிக்களத்திற்கு கொல்லக்கொடுத்து விட்டு தாம் மட்டும் உலக நாடுகளெங்கும் உல்லாசப் பயணம் நடத்தி வருகின்றனர்.

இவர்களால் தூண்டி விடப்பட்ட அப்பாவி மக்கள் அவலங்களை சுமந்து நின்றார்கள். ஆனால் இவர்களது குடும்பங்களோ வெளிநாடுகளில் ஆடம்பர வாழ்வு நடத்துகின்றார்கள்.

1956 இல் இந்த நாட்டில் தனிச்சிங்கள சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன மூலம் இந்த நாட்டில் வாழுகின்ற தமிழ பேசும் மக்கள் இரண்டாம் தர பிரஜைகளாக ஆக்கப்பட்டனர்.

ஆனாலும், இவைகள் குறித்தும் பேசுகின்ற தார்மீக உரிமையை சுயலாப தமிழ் அரசியல் தலைமைகள் அன்றே இழந்து விட்டன.

காரணம், அன்று தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது அன்றைய நாடாளுமன்றத்தில் பருத்தித்துறை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இடதுசாரி தலைவர்களில் ஒருவரான பொன் கந்தையா அவர்கள் அதற்கு மாற்று யோசனை ஒன்றையும் தெரிவித்திருந்தார்.

தமிழ் மக்கள் சிங்களத்தை கற்பது என்றால், சிங்கள மக்களும் தமிழ் மொழியை கற்க வேண்டும் என்றும் தீர்க்கதரிசனமாக தெரிவித்திருந்தார்.

இந்த கருத்தை அன்று நாடாளுமன்றத்திலும், அதற்கு அப்பாலும் இருந்த சிங்கள தலைவர்கள் பலரும் வரவேற்றிருந்தனர்.

ஆனாலும், அன்றைய தமிழ் அரசியல் தலைமைகள் அதை ஏற்றிருக்கவில்லை. எதிர்த்தார்கள்.

சிங்களம் கற்பது தவறு என்று சாதாரண தமிழ் குடிமக்களுக்கு உணர்ச்சி பொங்க போதனைகள் நடத்தி விட்டு. தாம் மட்டும் இரகசியமாக சிங்களம் கற்றுக்கொண்டார்கள். தமது சுயலாபங்களுக்காக தமது பிள்ளைகளை மட்டும் சிங்களம் கற்பிக்க வைதத்தார்கள்.

சிங்களம் கற்க விடமாட்டோம் என்று அன்று அடம் பிடித்த மூத்த தமிழ் தலைவர்கள் இன்றும் சரளமாக சிங்களம் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். இதை இல்லை என்று யாரும் மறுப்பார்களா?....

அமரர் பொன் கந்தையா அவர்களது தீர்க்கதரிசனங்களை அன்றைய தமிழ் தலைமைகள் ஏற்றிருந்தால் இன்று எமது தமிழ் பிஞ்சுகளும், பெற்றோர்களும் இலங்கையில் உள்ள இரு மொழிகளையும் கற்பதற்கு மாறாக புலம்பெயர் நாடுகளெங்கும் சென்று அந்தந்த நாடுகளில் உள்ள பல மொழிகளையும் பொருளாதார காரணங்களுக்காகவும், கல்வி வசதிகளுக்காகவும் கற்க வேண்டிய நிரப்பந்தம் உருவாகியிருக்காது.

**இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பது தமிழ் மக்களுக்கு கிடைத்திருந்த அரியதொரு வாய்ப்பாகும். ஆனாலும் சுயலாப தமிழ் தலைமைகள் தமது அடங்காத யுத்த ஆசைகளுக்காகவும், அடைய முடியாத விருப்பங்களுக்காகவும் அதை ஏற்க மறுத்து அப்பாவி தமிழ் மக்களை யுத்தத்திற்கு பலிகொடுத்திருக்கிறார்கள்.**

இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்கள் 2012 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் தமிழ் மக்கள் சிங்களத்தை கற்பதற்கும், சிங்கள மக்கள் தமிழ் மொழியை கற்பதற்குமான நிதியினை ஒதுக்கியிருப்பதை நான் இந்த இடத்தில் வரவேற்கின்றேன்.

அதேவேளை எவரும் செய்யத் துணியாத செயலாக ஜக்கிய நாடுகள் சபையில் தமிழ் மொழியிலும் பேசி வருவது குறித்து இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த சபையில் மீண்டும் எனது மக்களின் சார்பில் ஜனாதிபதி அவர்களுக்கு பாராட்டு தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

மாறி மாறி ஆட்சிக்கு வந்திருந்த அன்றைய இலங்கை அரச தலைவர்களால் பண்டா- செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்பன கிழித்தெறியப்பட்டன.

ஆனாலும் இவைகள் குறித்து பேசும் தார்மீக உரிமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இழந்து விட்டனர்.

காரணம், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் இருந்து எமது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட அனைத்து ஒப்பந்த முயறசிகளையும், சுயலாப தமிழ் தலைமைகளே உடைத்து சிதைத்திருக்கின்றார்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பது தமிழ் மக்களுக்கு கிடைத்திருந்த அரியதொரு வாய்ப்பாகும். ஆனாலும் சுயலாப தமிழ் தலைமைகள் தமது அடங்காத யுத்த ஆசைகளுக்காகவும், அடைய முடியாத விருப்பங்களுக்காகவும் அதை ஏற்க மறுத்து அப்பாவித் தமிழ் மக்களை யுத்தத்திற்கு பலிகொடுத்திருக்கிறார்கள்.

அன்று இலங்கை இந்திய ஒப்பந்தத்தை தமிழ் மக்களின் உரிமைக்காக சரிவரப் பயன்படுத்த விரும்பாமல், அப்பாவி மக்களின் மண்டைகளை நோக்கி தமது துப்பாக்கிகளை குறிவைத்து சுட்டு வெறி தீர்த்த குழுத் தலைவர்கள், இன்று தமிழ் மக்களின் உரிமைப்பிரச்சினை குறித்து நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள்.

தமிழ் மக்களின் மன விருப்பங்களை ஏறி மிதித்து, அதில் நின்று சாம்பல் மேட்டு சாம்ராச்சியம் நடத்தியவர்கள் மனித உரிமைகள் குறித்து சாத்தான்கள் போல் வேதம் ஓதுகின்றார்கள்.

அப்பாவி மக்கள் கொல்லப்பட்டதாகவும், தமிழ் மக்களின் உரிமைக்காக இளைஞர், யுவதிகள் தங்களது உயிர்களை அர்ப்பணம் செய்ததாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் தமிழ் மக்கள் மீது பரிதாபப்படுவதுபோல் பாசாங்கு செய்து முதலைக்கண்ணீர் வடித்து இந்த சபையில் உரையாற்றியிருக்கிறார்கள்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முன்னர் புலிகள் இயக்கத்தில் இருந்து மரணித்த உறுப்பினர்களின் தொகை ஆக மொத்தம் 652 பேர்கள் மட்டுமே. இதை புலிகளே அன்று உரிமை கோரியும் இருந்தனர்.

தவிர்க்க முடியாத ஒரு சூழலில் இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு முந்திய உரிமைப்போராட்டத்தில் நானும் தலைமைப்பாத்திரமேற்று செயற்பட்டிருக்கின்றேன்.

ஆனாலும், புலிகள் அமைப்பில் இருந்து மரணித்த அன்றைய 652 உறுப்பினர்களின் இழப்போடும், நான் அங்கம் வகித்த ஈ.பி.ஆல்..எல்.எவ் உட்பட ஏனைய அமைப்புகளில் இருநதும் மரணித்த நூற்றுக்கானக்கான உறுப்பினர்கள், மற்றும் பொதுமக்களின் இழப்போடும் இந்த நாட்டின் யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்டிருக்க வேண்டும்.

ஆனாலும், அந்த ஒப்பந்தத்தை ஏற்க மறுத்து அடங்காத யுத்தவெறியினால் எமது தமிழ் இளைஞர், யுவதி களில் 30 ஆயிரத்திற்கும் அதிகமான வர்கள் பலிகொடுக்கப்பட்டிருக் கிறார்கள். அப்பாவி மக்களும் பலி கொடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா - புலிகள் பேச்சுவார்த்தை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க - புலிகள் பேச்சுவார்த்தை, முன்னாள் பிரதமர் ரணில் விக்கரமசிங்க - புலிகள் பேச்சுவார்த்தை, அதன் பின்னர் இறுதியாக மகிந்த ராஜபக்ஷ அவரகளது இன்றைய அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை.

இவ்வாறு கிடைத்த அரிய வாய்ப்புகள் யாவும் யாரால் உதாசீனம்

செய்யப்பட்டன என்பதை இந்த சபையின் ஊடாக நான் தமிழ் தேசிய கூட்டமைப்பினரை நோக்கி கேட்கின்றேன்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை தொடர்ந்து நான் தொடர்ச்சியாக கேட்டு வந்திருக்கின்றேன்.

அழிவு யுத்தம் எதையும் பெற்றுத் தராது. அது எமது மக்களை நடுத் தெருவில் கொண்டு வந்து நிறுத்தும். எமது இளைஞர் யுவதிகளை பலியெடுக்கும், அப்பாவி மக்களை கொன்று பசி தீர்க்கும். ஆகவே அரசியல் தீர்வின் மூலம் அடைய வேண்டிய .இலக்கினை பெறுவோம், யுத்தத்தை கைவிட்டு வாருங்கள் என்று நான் பகிரங்கமாகவே கோரிக்கை விடுத்திருந்தேன்.

அன்றிலிருந்து இன்று வரை அழிவு யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வுக்கு வாருங்கள் என்று எமது மக்களை அழிவுகளில் இருந்து காப்பதற்காக அறைகூவி வந்த எமக்கு தமிழ் மக்களின் அவலங்கள் குறித்தும், நடந்து முடிந்த அழிவுகள் குறித்தும் பேசுவதற்கு தார்மீக உரிமை உண்டு என்று கூறுகின்றேன்.

ஆனாலும், அழிவு யுத்தத்தை ஆதரித்து வந்த சுயலாப தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் அழிவுகள் குறித்து எந்த முகத்தோடு பேசி வருகின்றார்கள்?...

எமது தமிழ் இளைஞர், யுவதிகளை பலாத்காரமாக அழிவு யுத்தத்திற்கு அள்ளிக்கொடுத்து விட்டு, அழிவுக்கு ஊரார் வீட்டு பிள்ளைகளை ஆட்சேர்க்கும் பணிகளில் ஈடுபட்டு விட்டு அதற்கு பரிகாரமாக தாம் மட்டும் தமது குடும்பங்களோடு தப்பித்துக் கொண்டவர்களே இன்று இந்த சபையில் தமிழ் மக்களின் அழிவுகள் குறித்து நீலிக்கண்ணீர் வடித்து வருகின்றார்கள்.

நான் இந்த சபையின் ஊடாக தமிழ தேசிய கூட்டமைப்பை நோக்கி சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகின்றேன்.

பண்டா - செல்வா ஒப்பந்தம் என்றும் டட்லி - செல்வா ஒப்பந்தம் என்றும் கிழித்தெறியப்பட்ட வரலாறுகளை நீங்கள் கூறி வருகின்றீர்கள். ஏற்றுக்கொள்கின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க அவர்கள் கொண்டு வந்திருந்த தீர்வுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் இருந்த எதிர்க்கட்சிகளோடு இணைந்து நீங்கள் தீயிட்டு எரிக்கவில்லையா?....

அந்த தீர்வுத்திட்டத்தை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நடத்திய வீதி ஆர்ப்பாட்ட பேரணியில் எந்த முகத்தோடு நீங்கள் கலந்து கொண்டு தமிழ் மக்களுக்கான தீர்வை எதிர்த்து கோசம் எழுப்பியிருந்தீர்கள் என்று கேட்கின்றேன்.

எல்லா மக்களும் சரிசமமானவர்களே என்ற தனது விருப்பங்களையும், கொள்கையினையும் முன்னிலைப்படுத்தி 2012 ஆம் ஆண்டிற்கான இந்த வரவு செலவுத் திட்டத்தினை இந்த சபையில் ஜனாதிபதி சமர்ப்பித்திருக்கிறார்.

எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள் ஆளும் கட்சியின் யோசனைகளை எதிர்த்தே தீர வேண்டும் என்ற உங்களது வழமையான சுயலாப சம்பிரதாயங்களை அடிப்படையாகக் கொண்டு இன்று இந்த வரவு செலவுத் திட்டத்தை முன்னின்று எதிர்ப்பது உங்களில் யார் என்ற போட்டியில் ஈடுபட்டு வருகின்றீர்கள்.

நீங்கள் ஒரு அணியாகவே இருந்து கொண்டு யார் உங்களில் தமிழ் தேசியவாதிகள் என்பதை புலம்பெயர் தமிழ் மக்களுக்கு காட்டுவதற்காகவும், உங்களில் யார் தமிழ் இனவாதத்தை பேசி தமிழ் மக்களின் வாக்குகளை அபகரித்து நாடாளுமன்ற நாற்காலிகளை கைப்பற்றி உங்களது சுகபோகங்களை அனுபவித்து விடலாம் என்ற போட்டியில் ஈடுபட்டு வருகின்றீர்கள்.

தமிழ்த் தேசியம் என்பது வெறுமனே தமிழ் இன உணர்ச்சிகளை மட்டும் ஊட்டிவிட்டு மக்களை வீதிக்கு இழுத்து விட்டு நீங்கள் மட்டும் நாட்டை விட்டே ஓடிப்போய் ஒளிந்து கொள்ளும் கோழைத்தனம் அல்ல.

கட்டிய வேட்டி கசங்காமல், உடுத்த உடுப்பின் மடிப்பும் கசங்காமல், வியர்வை சிந்தாமல் உலக நாடுகளின் உல்லாச விடுதிகளில் படுத்துறங்கும் சோம்பேறித்தனமும் அல்ல.

அது, எமது மக்களுக்காக குரல் கொடுத்து எமது மக்களுக்காக மக்களுடனேயே வாழ்ந்து அவர்களது இன்ப துன்பங்களிலும் பங்கெடுப்பதாகவே இருக்க வேண்டும்.

யுத்த காலத்தில் சோறில்லை என்று அழுத சாதாரண குடிமக்களின் குரலுக்கு செவிசாய்க்க விரும்பாமல், அன்றாட அவலங்களில் சிக்கித் தவித்த மக்களின் துயரங்களை போக்க முடியாமல் மேல்நாட்டு பஞ்சணைகளில் அடிக்கடி படுத்துறங்கினீர்கள்.

அதற்காகவே தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினையினை காரணமாக வைத்து இன்று வரை நீங்கள் அமரிக்கா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், சுவிஸ் என்று உலகத்தை சுற்றி உங்கள் உல்லாசத்தை நடத்தி வருகின்றீர்கள்.

இலங்கையில் மழைபெய்கிறது. நீங்கள் அமெரிக்காவில் சென்று குடை பிடிக்கின்றீர்கள். அமெரிக்காவிலும், கனடாவிலும் இருந்து எமது மக்களுக்காக என்ன வாங்கி வந்தீர்கள்?...

அங்கிருந்து எமது மக்களுக்காக என்னவொரு நல்ல செய்தியை கொண்டு வந்தீர்கள்?....

சீஸ் பேர்கரும், சிக்கன் பேர்கரும், பிஸ்ஸாவும், நீங்கள் விரும்பும் உற்சாக பானமும், உல்லாச விடுதியும் நன்றாக இருந்தது என்று உங்கள் குடும்பங்களோடு கூடிச்சிரித்து மகிழ்ந்து சொன்ன செய்திகளை தவிர தமிழ் மக்களுக்காக எதை சுமந்து வந்தீர்கள்?...

வெளிநாட்டு ராஜதந்திரிகளும், அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளும் இங்கு வந்தார்கள். யாராக இருப்பினும் இலங்கை அரசுடன் பேச்சு நடத்தியே தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று சொல்லிவிட்டு போகிறார்கள். ஆனால், நீங்கள் மட்டும் தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுவதற்காக வெளிநாடுகளில் இருந்து அரசியல் தீர்வை இறக்குமதி செய்து தருகிறோம் பாருங்கள் என்ற தோரணையில் தொடர்ந்தும் ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்து வருகின்றீர்கள்.

இதுவரை காலமும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைக்கு எதிராகவும், பொருளாதார மீட்சிக்கு தடையாகவும் சில தடைகள் இருந்து வந்தன.

ஒன்று, இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு பின்னரான அழிவு யுத்தம். அது இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களது செயற்திறனால் முடிவிற்கு கொண்டு வரப்பட்டு விட்டது.

இன்னொன்று உறுதியானதும், துணிச்சலானதுமான அரசியல் தலைமையற்ற நிலைமை. அதுவும் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களால் இலங்கைத்தீவில் வாழும் சகல மக்களுக்குமான தலைமையாக அவரால் அந்த வெற்றிடம் நிரப்பப்பட்டுள்ளது.

இதற்கு உதாரணம். இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13 ஆம் திருத்தச்சட்டமே நடைமுறைக்கு சாத்தியமான தீர்வு என நாம் அனைத்து அரச தலைவர்களிடமும் எடுத்துரைத்து வந்திருந்த போதும், அதை துணிச்சலோடு யாரும் முன்னெடுக்க வந்திருந்ததில்லை. தமிழ் அரசியல் தலைமைகளின் சுயலாப எதிர்ப்பை காரணம் காட்டியும், அதிகாரம் உள்ள வரை ஆட்சியில் இருந்து விட்டு போவோம் என்ற பொறுப்பற்ற தன்மையாலும் பல்வேறு அரச தலைவர்களும் எமது நடைமுறை சார்ந்த கோரிக்கைகளை கருத்தில் எடுத்து செயற்பட்டிருக்கவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களே நாம் எடுத்துரைத்த நடைமுறைச் சாத்தியமான அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்த முன்வந்திருக்கிறார்.

இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பினராகிய நீங்களும் கூட அரசாங்க உயர் மட்ட பிரதிநிதிகளோடு இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் குறித்து பேச ஆரம்பித்திருக்கிறீர்கள்.

ஆனாலும், நாடாளுமன்றத்தில் நீங்கள் உரையாற்றும் போது சிங்களம் எமது மக்களுக்கு எந்த தீர்வையும் தரப்போவதில்லை என்று இனவாதம் பேசி வேறொரு முகத்தை காட்டுகின்றீர்கள்.

இதில் எதை தமிழ் பேசும் மக்கள் நம்புவது?.... உங்களது உணர்ச்சிவசப்பட்ட நாடாளுமன்ற உரைகளையா?... அல்லது ஊடகங்களில் வெளிவரும் உங்கள் வீரஅறிக்கைகளையா?.... அல்லது உங்களது வெளிநாட்டு பயணங்களையா?.... அல்லது இன்று மாகாண அதிகாரங்கள் குறித்து அரசாங்கத்துடன் பேசிக்கொண்டிருப்பதையா?.... எத்தனை முகங்களை பலருக்கும் நீங்கள் காட்டி வருகின்றீர்கள்?...

நான் உங்களோடு போட்டிஅரசியல் நடத்த விரும்பவில்லை. அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காண விரும்பி ஜனநாயக வழிக்கு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் வந்தால் நான் புலிகளோடு மாற்று அரசியல் நடத்திக்கொண்டிருக்க மாட்டேன் என்று அன்று பகிரங்கமாகவே சொல்லி வந்தது போல.... தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய உங்களுக்கும் கூறி வைக்கின்றேன். நீங்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மன விருப்பங்களோடு வந்தால், நான் உங்களோடு மாற்று அரசியல் நடத்திக்கொண்டிருக்க மாட்டேன்.

எமக்கு இந்த நாடாளுமன்ற நாற்காலிகள் தேவையில்லை. தேர்தலும் தேவையில்லை. உங்களது தலைமையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைத்து அது சரிவர நடக்கின்றதா என்பதை நான் அரசியலில் இருந்து விலகி எங்காவது ஒரு ஓரத்தில் நின்று அவதானித்துக் கொண்டிருப்பேன்.

ஆனால், நீங்கள் அதற்கு தயாராக இல்லை. உங்களது சொந்த சலுகைகளுக்காக மட்டும் அரசாங்கத்தோடு கூனிக்குறுகி, வளைந்து, நெளிந்து, பல்லிளித்து பக்குவமாக பேசுகின்றீர்கள். அதற்காக அரசாங்கத்தின் பின்கதவுகளை சப்தமின்றி மெதுவாக தட்டுகின்றீர்கள்.

இப்படி பேசி உங்களது சொந்த சலுகைகளை பெறும்போது மட்டும் நீங்கள் நினைத்ததை குனிந்து நின்று சாதித்து விடுகின்றீர்கள்.

ஆனாலும், தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினை குறித்து பேசும் போது மட்டும் பூமியில் இருந்து ஆகாயம் வரைக்கும் நெருப்பாக துள்ளிக் குதிக்கிறீர்கள்.

நீங்கள் அரசாங்கத்தோடு நெருப்பாக துள்ளிக்குதித்தாலும், உங்கள் மீது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் விருப்பம் கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணமே தெரியாமல் கொழும்பில் வளரும் உங்களது பிள்ளைகளுக்கு அல்லது வெளிநாடுகளில் வாழுகின்ற உங்கள் பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று அங்குள்ள நிலவரங்களை உங்கள் பிள்ளைகளுக்கு காட்டுங்கள் என்று ஜனாதிபதி அவர்களே உங்களுக்கு அன்பாக சொன்ன அவரது நற்பண்பை நான் மதிக்கின்றேன்.

அந்தளவிற்கு நீங்கள் ஜனாதிபதி அவர்களிடம் தனிப்பட்ட ரீதியாக நன்மதிப்பை பெற்றிருக்கிறீர்கள். குடும்ப உறவுகளை வளர்த்திருக்கிறீர்கள்.

இந்த உறவை அரசியல் ரீதியாகவும் வளர்ப்பதற்கு ஜனாதிபதி அவர்கள் ஆசைப்படுகின்றார். தயவு செய்து அதற்கு முன்வாருங்கள்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த போது, வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களோடு தான் நேரில் பேசி தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காணத்தயார் என்று தனது விருப்பத்தை வெளிப்படையாக் தெரிவித்திருந்தார்.

அதை நான் அன்று பகிரங்கமாகவே வரவேற்றிருந்தேன். ஆனால் அந்த விருப்பங்களை அமரர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஏற்றிருக்கவில்லை.

ஜனாதிபதி உங்களோடும் பேசி தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினைக்கு தீர்வு காண விரும்புகின்றார். அதற்கான பொறுப்பை நானே ஏற்கிறேன்.

இன்று நாடாளுமன்ற தெரிவுக்குழுவிற்கான யோசனை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நீங்களும் அங்கம் வகிப்பதன் மூலம் எமது மக்களின் அரசியலுரிமைக்கு தீர்வு காணும் இலக்கு நோக்கி முன்னேறலாம்.

(தொடர்ச்சி நாளைய தினமுரசில்)

---

**அன்றிலிருந்து இன்று வரை அழிவு யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வுக்கு வாருங்கள் என்று எமது மக்களை அழிவுகளில் இருந்து காப்பதற்காக அறைகூவி வந்த எமக்கு தமிழ் மக்களின் அவலங்கள் குறித்தும், நடந்து முடிந்த அழிவுகள் குறித்தும் பேசுவதற்கு தார்மீக உரிமை உண்டு என்று கூறுகின்றேன். ஆனாலும், அழிவு யுத்தத்தை ஆதரித்து வந்த சுயலாப தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் அழிவுகள் குறித்து எந்த முகத்தோடு பேசி வருகின்றார்கள்?....**

---

**இலங்கையில் மழைபெய்கிறது. நீங்கள் அமெரிக்காவில் சென்று குடை பிடிக்கின்றீர்கள். அமெரிக்காவிலும், கனடாவிலும் இருந்து எமது மக்களுக்காக என்ன வாங்கி வந்தீர்கள்?....**
**அங்கிருந்து எமது மக்களுக்காக என்னவொரு நல்ல செய்தியை கொண்டு வந்தீர்கள்?....**
**சீஸ் பேர்கரும், சிக்கன் பேர்கரும், பிஸ்ஸாவும், நீங்கள் விரும்பும் உற்சாக பானமும் உல்லாச விடுதியும் நன்றாக இருந்தது என்று உங்கள் குடும்பங்களோடு கூடிச்சிரித்து மகிழ்ந்து சொன்ன செய்திகளை தவிர தமிழ் மக்களுக்காக எதை சுமந்து வந்தீர்கள்?....**

# அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் சங்கானை, யாழ். செயலகம் வென்றது



சங்கானை செயலக அணி



யாழ். செயலக அணி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகம், யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கிடையே இரண்டாவது ஆண்டாக நடத்திய யாழ். அரசாங்க அதிபர் வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டிகளிலல் யாழ். செயலகம், சங்கானை பிரதேச செயலக அணிகள் கிண்ணத்தை கைப்பற்றியது.

வலைப்பந்து மற்றும் மென்பந்துப் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் கல்வியங்காடு ஜீ.பி.எஸ்.விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் நடைபெற்றது. இதில் வலைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியும் யாழ். மாவட்ட செயலக அணியும் மோதிக்கொண்டன.

இதில் யாழ். மாவட்ட செயலக அணி 11 - 04 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியது. இப்போட்டியில் சிறந்த விளையாட்டு வீராங்கனையாக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரியும் யாழ். மாவட்ட செயலக வலைப்பந்தாட்ட அணியின் உறுப்பினருமான ஜே.எப்.எ.ரூபசிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ந்து நடைபெற்ற மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் சங்கானை பிரதேச செயலக அணியும், யாழ். மாவட்ட செயலக அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய சங்கானை பிரதேச செயலக அணி 12.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 52 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி களமிறங்கிய யாழ். செயலக அணி முன்னிலை துடுப்பாட்ட வீரர்கள் ஐவர் 10 ஓட்டங்களுக்குள் விரைவாக விக்கெட்டை இழந்தனர். இறுதியில் 14.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஈடுபட்டனர். 47 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதன் மூலம் ஐந்து ஓட்டங்களால் வெற்றிபெற்ற சங்கானைப் பிரதேச செயலக அணி கிண்ணத்தை கைப்பற்றியது. (93)

## தர்ஷினி கப்டன்



(கொழும்பு)

சிங்கப்பூரில் நடைபெறவுள்ள 6 நாடுகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்காக பல புதுமுகங்களைக கொண்ட இலங்கை குழாம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

டிசம்பர் 5 முதல் 11 ஆம் திகதி வரை இச்சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது. இலங்கை பிஜி, நமீபியா, பப்புவா நியூகினியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய அணிகள் இப்போட்டிகளில் பங்குபற்றவுள்ளன.

ஆசியாவின் மிகச் சிறந்த வலைப்பந்தாட்ட கோல்புகுத்துநரான 6 அடி 9 அங்குல உயரமான வீராங்கனையான தர்ஷினி சிவலிங்கம் இம்முறை இலங்கை அணிக்கு தலைமை தாங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருகோணமலையைச் சேர்ந்த அஸ்வினி பாக்கியராஜா எனும் மற்றொரு தமிழ் வீராங்கனையும் இக்குழாமில் இடம் பெற்றுள்ளார்.

## விளையாட்டுக்கழக அங்குரார்ப்பணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்து விளையாட்டுக் கழகம், சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கழகத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. அ. கயிலாயபிள்ளை தலைவராகவும், ந. பாலச்சந்திரன் உப தலைவராகவும், த. இரகுலேசன் செயலாளராகவும், த.மஞ்சூரன் உப செயலாளராகவும், கு சதா சிவமூர்த்தி பொருளாளராகவும், து. ரஜித்குமார் உபபொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டதுடன் உறுப்பினர்களாக 12 பேர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-11)

## விளையாட்டுச் செய்திகள்

## ஹென்றியரசர் வெற்றி

(யாழ்ப்பாணம்)

கொழும்பு விஞ்ஞான விளையாட்டு அணிக்கெதிரான நட்பு ரீதியான கால்பந்துப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

இப்போட்டி நேற்று முன்தினம் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

ஆரம்பம் முதல் ஆட்டம் நிறைவடையும் வரை அபாரமான ஆட்டத் திறனை வெளிப்படுத்திய இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (93)

## 2ஆவது போட்டி இன்று

மேற்கிந்தியத்தீவுகள், இந்திய அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இரண்டாவது போட்டி இன்றைய தினம் விசாகப்பட்டினத்தில் பகலிரவாக இடம் பெறவுள்ளது.

## 15ஆம் திகதிக்குள் சம்பள நிலுவை வழங்கப்படும் என்கிறார் அமைச்சர்

(கொழும்பு)



இலங்கை கிரிக்கெட் வீரர்களுக்கு வழங்கப்படவுள்ள சம்பள நிலுவைகள் எதிர்வரும் டிசம்பர் 15ஆம் திகதிக்கு முன் வ்ழங்கப்படும் என விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அறிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க நேற்று பாராளுமன்றில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவையில் இருந்து 4.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கப்பெறவுள்ளதாகவும் அதன்மூலம் சம்பள நிலுவைகளை வழங்க முடியும் எனவும் மஹிந்தானந்த அளுத்கமகே குறிப்பிட்டுள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் முடிவடைந்த உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடிய இலங்கை அணியின் வீரர்களுக்கு இன்னும் போட்டிகளுக்கான கட்டணங்கள், உடன்படிக்கைத் தொகைகள் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



**இலங்கை கிரிக்கெட் அணியின் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்பட்டது. இதில் ஆண்டின் சிறந்த வீரராக டில்சான் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த சகலதுறை வீரராகவும் அவர் தெரிவுசெய்யப்பட்டார். சிறந்த துடுப்பாட்ட வீரராக சங்ககார தெரிவு செய்யப்பட்டதுடன் மக்கள் நாயகன் விருதையும் தட்டிச் சென்றார். ஒரு நாள் போட்டியின் சிறந்த பந்து வீச்சாளராகவும் வளர்ந்துவரும் வீரருக்கான விருதையும் திஷார பெரேரா பெற்றுக் கொண்டார். டெஸ்டின் சிறந்த பந்து வீச்சாளராக மெண்டிஸ் தெரிவு செய்யப்பட்டார். இந்நிகழ்வில் விருதுடன் டில்சான், சங்ககார நிற்பதைக் காணலாம்.**

## பரிசில் வழங்கல்

(பருத்தித்துறை)


வடமாகாண வலயப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் எதிர்வரும் 5ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிதாக நியமனம் பெற்ற வடமராட்சி வலக் கல்விப் பணிப்பாளர் சி. நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் சி. சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

பரிசில்களை வடமராட்சி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி ராஜராஜேஸ்வரி சத்தியசீலன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (உ-109)

## சரிவிலிருந்து மீண்டது நியூசிலாந்து

(பிரிஸ்பேன்)



அவுஸ்ரேலிய அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணி சரிவிலிருந்து மீண்டுள்ளது. அவுஸ்ரேலிய, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட தொடரின் முதலாவது போட்டி நேற்று பிரிஸ்பேனில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் தடுமாறி விக்கெட்டுக்களை விரைவாக இழந்தது. 96 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஐந்து விக்கெட்டுக்களை நியூசிலாந்து அணி பறிகொடுத்திருந்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த விட்டோரி மற்றும் டீன் பிரௌன்லீ அணியை சரிவிலிருந்து மீட்டதுடன் நிதானமான ஆட்டத்தை ஆடி வருகின்றனர்.

நேற்றைய ஆட்டம் மழை காரணமாக நிறுத்தப்பட்ட வேளை, ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஆட்டமிழக்காது விட்டோரி 45, பிரௌன்லீ 32 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். ஆறாவது விக்கெட்டுக்காக இதுவரை 82 ஓட்டங்களை இவர்கள் இணைப்பாட்டமாகப் பெற்றுள்ளனர். மற்றும் மக்குலம் 34 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பந்து வீச்சில் அறிமுக வீரர் ஸ்டார்க் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். நேற்றைய முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக 51 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் இரண்டாம் நாளாகும்.

## பொண்டிங் விடைபெற இதுவே சரியான நேரம்

(ஹமில்டன்)



ரிக்கி பொண்டிங் கிரிக்கெட்டுக்கு விடைகொடுக்க இதுவே சரியான தருணம் என்று நியூசிலாந்து அணியின் முன்னாள் கப்டன் கிறிஸ் கெய்ன்ஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலிய டெஸ்ட் அணியில் 3ஆவது வீரராகக் களம் இறங்கும் ரிக்கி பொண்டிங் தற்போதைய சராசரி 27 ஓட்டங்கள் கொண்டுள்ளார். அவர் ஆட்டத்தில் இருந்து விடுபட சரி யான நேரம் என்று நான் நினைக்கிறேன். மார்க் டெய்லர், இயான் ஹூலி, மார்க்வோ போன்ற சிறந்த வீரர்கள் தங்கள் ஆட்டத் திறன் குறித்து சுட்டிக்காட்டப்பட்டதும் விலகினார். ஆனால் மிகப்பெரிய வீரர் என்பதால் ரிக்கி பொண்டிங் குறித்து யாரும் எதுவும் தெரிவிக்கவில்லை. இருப்பினும் அவர் ஆட்டத்தில் இருந்து ஓய்வு பெற இதுவே சரியான தருணம் என நான் நிறைக்கின்றேன. அதற்கு மேல் அவரின் முடிவு எனத் தெரிவித்துள்ளார்.

31. அமில - காரத் தாக்கம் அல்லாதது.
   1. $H_2So_4(aq)$ + $2NaOH(aq)$ - $Na_2SO_4(aq)$ - $2H_2O_{(l)}$
   2. $CuSo_4(aq)$ + $2NaOH(aq)$ - $Na_2SO_4(aq)$ - $Cu(OH)_2(S)$
   3. $HC1(aq)$ + $NaOH(aq)$ - $NaC1(aq)$ - $2H_2O_{(l)}$
   4. $CH_3COOH(aq)$ + $NaOH(aq)$ - $CH_3CooNa(aq)$ - $H_2O_{(l)}$


32. CuSo4 (aq) (செப்பு சல்பேற்று) இன் பயன் அல்லாதது.
   1. பங்கசு நாசினியைப் பயன்படுத்தல்
   2. இரசாயன மருந்துகள் தயாரிக்கப் பயன்படுத்தல்
   3. வெளிற்றும் கருவியாகப் பயன்படுத்தல்
   4. நிறமூட்டிகளின் உற்பத்தியாகப் பயன்படுத்தல்

33. சிமெந்து இறுகுவதற்குப் பயன்படுத்தும் ஜிப்சம் இன் இரசாயனச் சூத்திரம்?
   1. $CaCo_3$ 2. $CaSO_4$ 3. $CuSO_4$, $H_2O$ 4. $Ca(OCl)_2$

34. நீரின் நிலையான வன்மைக்கு காரணமாவது?-
   1. நீரில் கரைந்துள்ள $CaCo_3$
   2. வெப்பமேற்றி அகற்ற முடியாத $CaSO_4$, $MgSO_4$
   3. நீரில் கரைந்துள்ள குளோரைட்டு அயன்
   4. நீரில் உள்ள சோடியம் அயன்

35. நீர் 9 கிராமில் உள்ள ஒட்சிசன் அணுக்களின் எண்ணிக்கை என்ன?
   1. $6.022X10^{23}$ 2. $\frac{6.022X10^{23}}{2}$ 3. $6.022X10^{23}$ X 2 4. $6.022X10^{23}$ X 9

36. நாகத் தகடு மீதுள்ள அலுமினியத் துண்டொன்று உருவில் காட்டப்பட்டுள்ளவாறு வைக்கப்பட்டுள்ளது. இத் தொகுதியில் அனோட்டாகத் தொழிற்படுவது?




   1. Zn தகடு
   2. Al துண்டு
   3. மேலுள்ள தொகுதி முழுவதும்
   4. தெளிவான விடை கூற முடியாது

37. X எனப்படும் பதார்த்தம் ஒன்று உள்ள போத்தலில் காட்டப்பட்டுள்ள குறியீடுகள் இரண்டையும் காண முடிந்தது. இதன் மூலம் விளங்குவது,

| X=10 |
|---|
| $1moldm^{-3}$ |

   1. சார் அணுத்திணிவும் செறிவும்
   2. அணுக்களின் எண்ணிக்கையும் செறிவும்
   3. சார் அணித்திணிவும் சாரடர்த்தியும்
   4. சாரடர்த்தியும் மூலர் திணிவும்

38. எந்தவொரு தீயையும் அணைப்பதற்கு மிகவும் பாதுகாப்பான தீயணைப்பு முறை பின்வருவனவற்றுள் எது?
   1. நுரை தீயணை கருவி
   2. சோடா - அமில தீயணை கருவி
   3. காபனீரொட்சைட்டு தீயணை கருவி
   4. ஹெலன் தீயணை கருவி

39. பதார்தின் அளவை அளக்கும் சர்வதேச அலகு?
   1. மூல் 2. கிலோகிராம் 3. நீயுட்டன் 4. லீற்றர்

40. காகிதாதிகள் களஞ்சியத்தில் ஏற்பட்ட தீவிபத்தின்போது அங்குள்ள ஊழியர்கள் செயற்பட்ட முறைகள் சில கீழே காட்டப்பட்டன.
   A - களஞ்சிய அறையின் கதவுகள் யன்னல்கள் யாவும் மூடப்பட்டன
   B - தீ பற்றாத இடத்தில் இருந்த காகிதாதிகள் அனைத்தும் அகற்றப்பட்டன
   C - காபனீரொட்சைட்டு தீயணை கருவி பயன்படுத்தப்பட்டன. இவற்றில் மிகவும் பொருத்தமானவை
   1. A யும் B யும் 2. A யும் C யும் 3. B யும் C யும் 4. ABC மூன்றும்



# க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011

நேரம் - 2 மணி

# கல்வி முரசு

## விஞ்ஞானம் பகுதி - I

**யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

- **சகல வினாக்களுக்கும் விடையளிக்க.**
- 

**தெரிவு செய்க.**

01. புவியில் உள்ள அங்கிகளை சில கூட்டங்களாக வகுக்கத் தேவையேற்படின் அதற்கு மிகவும் பொருத்தமான பாகுபாடானது.
   1. பங்கசு, அல்கா, வைரசு, பற்றீரியா
   2. தாவரம், விலங்கு, நுண்ணங்கிகள்
   3. முலையூட்டிகள், மீன்கள், பறவைகள், ஊர்வன, ஈரூடக வாளிகள்
   4. சீலந்திரேற்றா, அனலிடா, மொலஸ்கா

02. அனேக இயல்புகளில் பொருந்துகின்ற அங்கிகள் ஒரே கூட்டத்தினுள் அடங்குமாறு பாகுபடுத்தப்படும் ஒரே கூட்டத்தில் அடங்கும் அங்கிகளாவன
   1. திமிங்கிலம், டொல்பின், சுறா, சூரை
   2. வண்ணத்துப்பூச்சி, இரால், பல்லி, கரப்பான்
   3. தேள், குருவி, கிளி, மைனா, வௌவால்
   4. உடும்பு, ஆமை, நாகபாம்பு, முதலை

03. இரு சொல் பெயரீட்டை அறிமுகப்படுத்திய விஞ்ஞானி யார்?
   1. சால்ஸ் டாவின் 2. ரொபட் ஹுக் 3. கெரோலன் லினேயஸ் 4. அனஸ்ட் போகல்

04. கலமொன்றை பல்வேறு தொழில்களை மேற்கொள்ளும் ஓர் தொழிற்சாலைக்கு ஒப்பிடலாம். இங்கு சக்தி சேமிக்கப்படுவது,
   1. இழைமணியில் 2. கலச்சுவரில் 3. கருவில் 4. முதலுரு மென்சவ்வில்

05. சூரியனைச் சூழ கோள்கள் சுழன்று வருவது போல் நியுத்திரன், புரோத்தன் ஆகியவற்றைக் கொண்ட கருவைச் சூழ இலத்திரன்கள் சூழல்கின்றன எனக் கூறியவர்.
   1. ஜே.ஜே.தொம்சன் 2. அர்னஸ்ட்ருதபோர்ட் 3. சட்விக் 4. மிலிக்கன்

06. திண்மப் பொருள் ஒன்றை மெழுகுவர்த்திச் சுவாலையால் வெப்பமேற்றும் போது தீப்பற்றவோ, உருகவேயில்லை. அதேநேரம் அதனை நீரில் கரைத்தபோது மின்னைக் கடத்துவது அறியப்பட்டது. அப்பொருளானது,
   1. அயடீன் 2. கறிப்பு 3. யூரியா 4. குளுக்கோசு


07. மஞ்சள் நிறமாக மாறிய நெற்தாவரத்திற்கு இடப்பட்ட யூரியா $(CO(NH)_2)$ இன் சார்மூலக் கூற்றுத் திணிவானது (C=12, O=16, N=14, H=1 ஆகும்)
   1. 60 2. 100 3. 44 4. 106

08. குறிப்பிட்ட உலோகமொன்றின் தாதுப் பொருளை வளியில் வெப்பமேற்றிய பின் கற்கரியுடன் வெப்பமேற்றுவதன் மூலம் அவ்வுலோகத்தை வேறாகப் பிரித்தறியலாம். அவ்வுலோகமாக அமையக்கூடியது?
   1. Na 2. Mg 3. Zn 4. K


09. செப்புசல்பேற் கரைசலொன்று இடப்பட்டிருந்த இரும்புப் பாத்திரம் கரைந்திருப்பதும் அதன் அடியல் செப்புத்தூள் படிந்திருப்பதும் அவதானிக்கப்பட்டது. இத்தாக்கம் எவ்வகைக்குரியதாகும்.
   1. இரசாயனப் பிரிகைத்தாக்கம்
   2. இரசாயன சேர்க்கைத் தாக்கம்
   3. இரட்டை இடப் பெயர்ச்சித் தாக்கம்
   4. ஒற்றை இடப் பெயர்ச்சித் தாக்கம்

10. மூலத் திணிவு எனப்படுவது அணு அல்லது மூலக்கூற்றுத் திணிவாகும். மூலத் திணிவு எனப்படுவது?
   1. $molkg^{-1}$ 2. mol 3. kg 4. $kgmol^{-1}$


11. சில நோய்த் தொற்றுக்களைத் தவிர்ப்பதற்காக சிறு வயதில் செயற்கை நீர்ப்பீடன தடுப்பூசி வழங்கப்படும். இவ்வாறு தடுப்பு மருந்தை வழங்கப்படாத நோயானது?
   1. நீரிழிவு 2. டிப்பீரியா 3. காசம் 4. போலியோ

12.  இக்குறியீட்டின் மூலம் காட்டப்படுவது?
   1. இருவாயி 2. திரான்ஸிஸ்டர் 3. தொகையிடும் சுற்று 4. கொள்ளவி


13. இவ்வரைபு மூலம் காட்டப்படுவது,
   1. அரை அலைச் செப்பமாக்கப்பட்ட ஆடலோட்டமாகும்
   2. ஆடலோட்ட மின் ஓட்டமாகும்
   3. முழு அலைச் சீராக்கலுக்குட்பட ஆடலோட்டமாகும்
   4. நேரோட்டமாகும்




14. வேகத்தின் அலகானது,
   1. $ms^{-1}$ 2. $ms^{-2}$ 3. $kms^{-2}$ 4. $kmh^{-2}$





15. மேலே வரிப்படத்தில் மூன்று வகை நெம்புகளின் இயல்புகள் காட்டப்பட்டுள்ளன. A, B, C முறையே,
   1. முதலாம் வகுப்பு : இரண்டாம் நெம்பு, மூன்றாம் நெம்பாகும்
   2. இரண்டாம் வகுப்பு : முதலாம் நெம்பு, மூன்றாம் நெம்பாகும்
   3. மூன்றாம் வகுப்பு : இரண்டாம் நெம்பு, முதலாம் நெம்பாகும்
   4. மூன்றாம் வகுப்பு : முதலாம் நெம்பு, இரண்டாம் நெம்பாகும்



16. படத்தில் தடைகளின் தொடுப்பில் தொடரான சுற்று முறையில் மாத்திரம் சமானத்தடையைக் காணக்கூடியது.
   1. A யும் C யும் 2. A யும் B யும்
   3. B யும் C யும் 4. மேற்கூறிய எதுவுமில்லை

17. பின்வருவனவற்றில் சரியானது எது?
   1. குழிவாடியின் முன் F இல் வைக்கப்பட்ட பொருளின் விம்பம் முடிவிலியில் தோன்றும்
   2. F-C இடையில் பொருளை வைக்கும் போது மெய், தலைகீழான, பொருளை விடச் சிறிய விம்பம் தோன்றும்
   3. C யில் பொருளை வைக்கும்போது மெய், தலைகீழான, பொருளை விடச்சிறிய விம்பம் தோன்றும்
   4. C யிற்கு அப்பால் பொருளை வைக்கப்படும் போது, மெய் தலைகீழான, பொருளை விடச் சிறிய விம்பம் தோன்றும்.

18. பாரமற்ற கோலொன்று A புள்ளியில் X, Y சுமைகள் மூலம் சமநிலைப் படுத்தப்பட்டுள்ளதை உரு சித்தரிக்கிறது. X, Y சுமைகள் தொடர்பான சரியான கூற்று.
   1. X = Y 2. X > Y
   3. X < Y 4. 2X = Y




19. தனிப் பூச்சிய வெப்ப நிலை எனப்படுவது?
   1. OK
   2. 273 ºC
   3. 273 K
   4. OºC



20. $J^{o}C^{-1}Kg^{-1}$ எனும் அலகு விளக்கும் பௌதீகக் கணியம்.
   1. வெப்பக் கொள்ளவு 2. தன் வெப்பக் கொள்ளளவு
   3. வெப்ப நிலை வேறுபாடு 4. வேலை செய்யும் ஆற்றல்

21. கீழ்வரும் இயல்புகளைக் கருத்திற்கொண்டு உரிய அங்கிக் கூட்டத்தைத் தெரிக.
   - உடல் துண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.
   - தூக்கங்கள் காணப்படாது
   - தோல் ஈரலிப்பானது
   - இவ்வியல்புகள் காணப்படும் கூட்டம்?
   1. மொல்ஸ்கா 2. ஆத்திராப் போடா 3. அனெலிடா 4. சீலந்திரேற்றா

22. புரேட்டா சோவாக்களின் இயல்பாக அமையாதது?
   1. ஒரு கலத்தால் ஆனது
   2. பிற போசனை
   3. இடப் பெயர்ச்சிக்காக சவுக்கு முளை, பிசிர்கள் அல்லது போலிப்பாதம் அற்றிருத்தல்
   4. கலச் சுவர் அற்றிருத்தல்

23. கலப்பிரிவின் போது,
   1. முதலில் கல குழியவுருவும் பின்னர் கருவும் பிரிகையடையும்
   2. முதலில் கருவும் பின்னர் கல குழியவுருவும் பிரிகையடையும்
   3. முதலில் கருவும் அடுத்து கலப்புன்னங்கங்களும் பிரிகையடையும்
   4. கலப்பிரிகையின் போது கரு பிரிகையடையாது

24. உடற் தொழிற்பாடுகள் சிறப்பாகப் பேணுவதற்கு உடல் வெப்ப நிலை சிறப்பு மட்டத்தில் பேணப்படல் முக்கியம். இதற்கு உடல் சிறப்பு வெப்பநிலை மட்டமானது.
   1. 39ºC 2. 37ºC 3. 34.5ºC 4. 30ºC

25. தூரப் பார்வையுடைய ஒருவருடைய நோய் நிலைமை.
   1. தொலைவிலுள்ளவை தெரியும் அருகில் உள்ளவை தெரியாது
   2. அருகிலுள்ளவை தெரியும். தொலைவிலுள்ளவை தெரியாது
   3. அண்மை, சேய்மை இரண்டு தெரிவதாகும்
   4. அண்மை, சேய்மை இரண்டும் தெரியாத நிலையாகும்

26. ஓமோன்களின் இயல்பாக அமையாதது?
   1. சேதனச் சேர்வையாக இருத்தல் 2. குருதி மூலம் கொண்டு செல்லப்படுதல்
   3. தொழிற்படுதற்கு அதிக செறிவு தேவைப்படல் 4. இலக்கு அச்சத்தில் மாத்திரம் தாக்குதல்


27. புடைக்கல் விழையத்தைச் சேராத கல வகை.
   1. வேலிக்காற் கலங்கள் 2. தோழமைக் கலங்கள்
   3. கற்கலம் 4. கடற் பஞ்சுக் கலம்

28. ஒளித் தொகுப்பின் போது வெளிவிடப்படும் ஒட்சிசனைப் பெற்றுத் தரும் பதார்த்தமானது?
   1. வேர்மயிர் மூலம் அகத்துறிஞ்சப்படும் நீராகும்
   2. வளி மண்டத்தில் இருந்து பெறப்படும் காபனீரொட்சைட்டாகும்
   3. உற்பத்தி செய்யப்படும் குளுக்கோசாகும்
   4. மேற்கூறிய எதுவுமன்று

29 பிரசாரணத்தை விளக்குவது?
   1. வேரின் புறத்தோலிலிருந்து அகத் தோல்வரை கலச்சுவரூடாக நிலத்திலுள்ள நீர் அசைதல்
   2. அமுக்கப்படித்திறன் வழியே கலத்திலுள் நீர் அசைதல்
   3. வேரின் புறத்தோலிலிருந்து காழ்வரை நீர் கலத்திலிருந்து கலத்திற்கு கரைசல் அசைதல்
   4. தாவரத் தண்டின் காழுக்கூடாக நீர் இலை வரை செல்லல்

30. மனித இதயத்தில் தூய குருதி காணப்படும் நாளம்?
   1. மேற் பெரு நாளம் 2. சுவாச நாளம் 3. கீழ் பெருநாளம் 4. வாயி நாளம்

# இந்தியாவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும்



இலங்கை இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியா தனது கரிசனையை வெளிப்படுத்தினாலும் தனது பூகோள அரசியல் நலன் சார்ந்த விடயங்களிற்கே இந்தியா முதன்மையான இடத்தை வழங்கி வருகிறது. ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பில் ஈழத் தமிழர்கள் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்கத் தவறியமை ஈழத்தமிழர்கள் அரசியல் ரீதியாக அடைந்த முதலாம் கடட முள்ளிவாய்க்கால் தோலவி என்பதை தற்போதைய சூழ்நிலையில் ஏற்கத்தான் வேண்டும்.

ராணுவரீதியாக தோல்வி முள்ளிவாய்க்காலில் ஏற்பட்டது போல் அரசியல் ரீதியில் 1987 ஆம் ஆண்டு நாங்கள் தோற்றுவிட்டோம். வடக்கு கிழக்கு இணைந்து மாகாணசபை உருவாக்கமானது ஈழத்தமிழர்கள் இனி என்றுமே அடைய முடியாத இலக்காகவே தற்போது மாறி உள்ளது. குறிப்பாக வடக்கு கிழக்கு தனித் தனியாக பிரிக்கப்பட்டு கிழக்கு மாகாண சபை தேர்தலும் முடிவடைந்து தற்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலிற்கான முனைப்புகள் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் சார்பில் நீதியாளர் விக்னேஸ்வரனை மாகாண முதல்வராக களம் இறக்க வேண்டும் என கூட்டமைப்பில் ஒரு சாராரும் இன்னொரு பகுதியினர் ஊடகவியலாளர் என்று கூறப்படும் வித்தியாதரனை முதன்மை வேட்பாளராக களம் இறக்க வேண்டும் எனவும் இப்பொழுதே கூட்டமைப்பிற்குள் குத்துவெட்டுகள் ஆரம்பமாகி உள்ளன.

ஆனால் நீதியாளர் விக்னேஸ்வரன் மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டி இடுவது என்பது கூட்டமைப்பு தனது சுயத்தை இழப்பதற்கு சமமானது எனக் கூறி விட்டதால் கூட்டமைப்பின் பழுத்த தலைவர்களும் சில புதிய தலைவர்களும் குழப்பம் அடைந்துள்ளனர். அதாவது மாகாண சபைத் தேர்தலில் போட்டி இட்டால் கூட்டமைப்பால் அரசுடன் பேச்சு மேசையில் பேரம் பேச முடியாது எனவும் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலில் போட்டி இடாமல் விட்டால் தான் தீர்வுத்திட்டம் தொடர்பில் இந்தியா இலங்கையை வற்புறுத்த முடியும் என இந்தியா இரா.சம்பந்தனிடம் தெட்டத் தெளிவாக கூறி உள்ளபோதிலும். வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு போட்டி இடாமல் விட்டால் தமிழ் தேசியத்திற்கு எதிரான சக்திகள் போட்டி இட்டு தேர்தலில் வெற்றி பெற்று விடும் என்று நியாயம் கூறப்பட்டு தேர்தலில் போட்டி இடுவதற்கான முழுமையான வேலைத் திட்டத்தில் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது.

கூட்டமைப்பை பொறுத்தவரை பதவிகளையும் சுகபோகங்களையும் அனுபவித்துக் கொண்டு இந்தியாவையும் சமாளித்துக் கொண்டு தமது காலத்தைக் கடத்துவதே நோக்கமாக உள்ளது. ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரை கூட்டமைப்பை இப்போது நம்பத் தயாராக இல்லாவிட்டாலும் தன்னால் உருவாக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தினால் இந்தியா மகிழ்வடையவே செய்யும். ஆனால் ராஜீவ் காந்தியின் மரணத்தின் பின் புலிகள் தொடர்பில் ஏற்பட்ட அதிருப்தி போன்று, தமிழ் தேசியக் கூட்டமைப்பு மீதும் இந்தியாவிற்கு கடுமையான அதிருப்தி உள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் மேற்குலகம் தனது மூக்கை நுழைக்க முற்படுகின்ற இந்த வேளையில் ஈழத்தமிழர் பிரச்சினையை இந்தியாவே கையாண்டு வருகின்றது. இந்தியாவின் தற்போதைய விருப்பத்தின் படி பார்த்தால் உள்நாட்டில் இலங்கை அரசுடன் சகல ,தமிழ்க்கட்சிகளும் பேசி ஒரு முடிவிற்கு வர வேண்டும் அவ்வாறு எட்டடப்படும் தீர்வுதான் சாத்தியமானது எனவும் இந்தியா நம்புகின்றது. 30 வருட பிரச்சினையை ஒரு நாள் அல்லது ஒரு வாரத்திற்குள் தீர்க்கமுடியாது என இந்தியாவும் உணர்ந்துள்ளது. இதனால் இலங்கை மேற்கொள்கின்ற பேச்சு முயற்சிகளையும் நாடாளுமன்ற தெரிவுக் குழுவையும் இந்தியா ஆமோதித்துள்ளது.

தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்க மாட்டோம் என மாறி மாறி அறிக்கைவிடும் சுமந்திரனும், சுரேஸ் பிரேமச்சந்திரனும் இறுதிக் கட்டத்தில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்தே ஆக வேண்டும். தமிழ் மக்களினுடைய அரசியல் பிரச்சினைக்கு இந்த தெரிவுக்குழுவின் ஊடாகவே நிரந்தர தீர்வு வழங்க முடியும் என ஜனாதிபதி அண்மையில் அலரிமாளிகையில் தம்மை சந்தித்த வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் கூறியுள்ளார். எனவே கூட்டமைப்பு இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவை சுரேஸ் கூறுவது போன்று புறக்கணித்தால். கூட்டமைப்பினர் இனப்பிரச்சினை தீர்வு பற்றி கதைப்பதற்கே அருகதை அற்றவர்களாகி விடுவர்.

மகிந்த அரசானது, திட்டமிட்டபடி இனப்பிரச்சினைக்கான தீர்வை நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் ஊடாக முன்வைக்கப் போகிறது. இதில் கூட்டமைப்பு அங்கம் வகிக்கா விட்டாலும். ஏனைய தமிழ் கட்சிகளுடன் பேசி ஒரு இணக்கப்பாட்டை எட்டி தீர்வை நடைமுறைப் படுத்தவே அரசு முயலும். இதை இந்தியாவும் ஆதரிக்கும். இல்லையேல் சிங்கள கடும் போக்காளர்களை சமாளிப்பதற்காக தீர்வை இழுத்தடிக்க வேண்டும் என்று அரசாங்கம் நினைத்தால் அதையும் அரசாங்கம் செய்யலாம். கூட்டமைப்பின் மீது பழியை போட்டு அரசாங்கம் இலகுவாக தப்பி விடும். இதனால் மேற்குலக நாடுகளும் தமது அழுத்தங்களை வழங்க முடியாத சூழ்நிலை உருவாகும். மீண்டும் கூட்டமைப்பு தமிழர்களிற்கு துரோகம் இழைத்த வரலாறு ஒன்று மட்டும் எழுதப்படும்.

ஏற்கனவே இறுதியாக இடம பெற்ற ஜனாதிபதி தேர்தலில் கூட்டமைப்பு நடந்து கொண்ட விதம் குறித்து பல்வேறு விமர்சனங்கள் வைக்கப்படுகிறது. கூட்டமைப்பினர் சரத் பொன்சேகாவை வெளிப்படையாக ஆதரித்தமை பற்றிய பல திடுக்கிடும் தகவல்களும் தற்போது வெளிவரத் தொடங்கி உள்ளன. தென் இலங்கையில் சரத் பொன்சேகாவும் மகிந்த ராஜபக்ஷவும் கடுமையான போட்டியில் இருந்த வேளை கூட்டமைப்பினர் ஜனாதிபதியை ஆதரித்தால் சிங்கள மக்கள் ஜனாதிபதியை அங்கீகரிக்க மாட்டார்கள் அல்லது வாக்களிக்க மாட்டார்கள் என்ற ஆலோசனையை பல மூத்த அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு கூறி உள்ளார்கள். இதனை அடுத்து ஏற்கனவே இடம்பெற்ற பேரம் பேசலுக்கு அமைவாக அரசாங்கத்திடம் இருந்து பரப்புரை செலவுக்கென கூட்டமைப்பினர் 200 இலட்சம் ரூபாவை கேட்டனர். இதற்கு அரசாங்கம் மறுப்புத் தெரிவித்ததுடன் கூட்டமைப்பினர் யாரையும் ஆதரிக்காமல் இருக்கவேண்டும் எனக் கூறி ஒரு தொகை பணத்தை வழங்கினர்.

இவ்வாறு அரசிடம் பணம் வாங்கியது கூட்டமைப்பில் உள்ள ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும். அந்தப் பணம் அந்த ஒரு சிலரின் தனிப்பட்ட வைப்புகளில் வைப்பிடப்பட்டது. இதனை அடுத்து சரத் பொன்சேகா, கூட்டமைப்பு கேட்டதை விட கூடுதலான பணத்தை வழங்கினார். கூட்டமைப்பினருடன் கூட்டு வைத்ததால் சரத் பொன்சேகா படுதோல்வியை சந்தித்தார். பொன்சேகா வெல்லக் கூடாது என்பதில் இந்தியாவும் உறுதியாக இருந்தது. இந்தியாவின் கணக்குப்படி கூட்டமைப்பு சரத்தை ஆதரித்தால் சரத் தோற்பார் என்பது தேர்தல் முடிவுகளின் படி சரியாகவே இருந்தது.

தற்போது கூட அரசாங்கத்தை விமர்சித்து வரும் கூட்டமைப்பினர் தமது தனிப்பட்ட தேவைகளிற்காக ஜனாதிபதியை பல தடவைகள் சந்தித்து உதவிகளை பெற்றுள்ளனர். இதை விட இந்தியாவிடமும் தமது குடும்பங்களிற்கான தனிப்பட்ட உதவிகளை கூட்டமைப்பினர் பெற்று வருகின்றனர். கூட்டமைப்பை பொறுத்தவரை இந்தியாவின் செல்லப் பிள்ளை என்பதை விட வளர்ப்புப் பிள்ளையாக இருந்து கொள்ளவே விரும்புகிறது. ஏன் எனில் செல்லப்பிள்ளையாக இருந்தால் குழப்பங்களை ஏற்படுத்த முடியாது. வளர்ப்புப் பிள்ளையாக இருந்தால் நாங்கள் வளர்ப்புப் பிள்ளைகள் தானே என எண்ணிக் கொண்டு குழப்ப அரசியலில் ஈடுபடலாம் என கூட்டமைப்பினர் நினைக்கின்றனர்.

இலங்கையில் மேற்குலகின் தலையீடு தேவையற்றது எனவும் தனது பிராந்திய நலன்களை ஒட்டியதாக இலங்கைப் பிரச்சினை இருப்பதால் ...

- த.கடலவன்

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

# புலிகளின் உள்ளக அதிகாரப் போராட்டம்

(10) - டி.பி.எஸ்.ஜெயராஜ்

விநாயகமூர்த்தி இந்த விசேட புலனாய்வுப் பிரிவுக்கு 2002ல் தலைவராக நியமிக்கப்பட்டார். ஒரு கட்டத்தில் அவர் இந்தியாவுக்கு ஒரு போலிக்கடவுச்சீட்டின் மூலம் பயணம் செய்து அங்கு ஒரு ஆதரவு வலையமைப்பை உருவாக்குவதற்காக அங்கு தங்கியிருந்தார். சமாதானப் பேச்சுக்களுக்காக ஐரோப்பா சென்ற எல்.ரீ.ரீ.ஈ தூதுக்குழுவினருடன் ஒரு போலிக்கடவுச் சீட்டின் உதவியுடன் இவரும் கூடச்சென்று பல ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம் செய்து புலம்பெயர் சமூகத்தினருடன் சத்தமில்லாமல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டார்.

யுத்தம் மீண்டும் வெடித்தது மற்றும் இராணுவத்தினர் மெல்ல மெல்ல முன்னேறத் தொடங்கினார்கள். 2009 ஜனவரி 2 இல் ஏற்பட்ட கிளிநொச்சியின் வீழ்ச்சி எல்.ரீ.ரீ.ஈ வட்டத்தில் எச்சரிக்கை மணியை ஓங்கி ஒலிக்க .வைத்தது. வரப்போகும் தோல்வியை தடுத்து நிறுத்துவதற்கான அவசர நடவடிக்கைகளில் எல்.ரீ.ரீ.ஈ ஈடுபட ஆரம்பித்தது.

அவ்வாறான ஒரு நகர்வுதான் கரும்புலி தற்கொலைப்படை அணியொன்றை தென்பகுதியில் செயற்பட வைத்து வன்முறை மற்றும் அழிவுகளை ஏற்படுத்தலாம் என்பது. இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கியது வேறுயாருமல்ல இப்பொழுது லெப்.கேணல் தரத்துக்கு பதவி உயர்த்தப்பட்டுள்ள விநாயகமூர்த்தியேதான்.

விநாயகம் தானே தற்கொலைத் தாக்குதலில் ஈடுபடவேண்டும் என்று எதிர்பார்க்கப் படவில்லை. தற்கொலைத் தாக்குதல்களை திட்டமிட்டு, ஒருங்கிணைத்து, மேற்பார்வை செய்யும்படி அவரிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டது. எல்.ரீ.ரீ.ஈயின் தலைமைப் பீடம் மிகப் பெரியதொரு வெடியொலியை எதிர்பார்த்துக் காத்திருந்த போதிலும், அவ்வாறான எந்த ஒரு நிகழ்வும் நடைபெறவில்லை. சாதாரணமாக எதிர்பாாத்தபடி விநாயகத்தினால் எதனையும் நிறைவேற்ற முடியவில்லை. இந்த முழு நடவடிக்கையும் எதிர்பார்த்ததுபோல நடக்காமல் வெடிக்காத வெறும் புஸ்வாணம் போலாகிவிட்டது.

ஆயுதப் படைகள் எல்.ரீ.ரீ.ஈ நிலைகளை நெருங்கி வந்து கொண்டிருந்த சமயம் தொடர்ந்து வெளியே ·தங்கியிருந்த விநாயகத்துக்கு இந்தத் தோல்வியும் மற்றொரு அர்த்தத்தில் ஆசீர்வதிக்கப்பட்ட வரப்பிரசாதமாகவே அமைந்தது. உண்மையில் தான் தென்பகுதியில் ஒரு பாரிய தாக்குதலை நடத்துவதற்கு முயற்சிகளைச் செய்தபோதிலும் பாதுகாப்பு மிகத் தீவிரமாகப் பலப்படுத்தப் பட்டிருப்பதனால் அது மிகவும் கடினமாக உள்ளதாக விநாயகத்தினால் தனது தோல்விக்கு ஒரு சமாதானம் சொல்ல முடிந்தது.

இந்த நிலைமை எல்.ரீ.ரீ.ஈ உயர்மட்டத்தால் விநாயகம் மீது கொண்டிருந்த நலன்களுக்கு தீங்கினை விளைவித்திருந்தாலும் விநாயகத்தைப் பொறுத்தவரை அது நன்மையளிப்பதாகவே இருந்தது. எல்.ரீ.ரீ.ஈ யினர் தமது கடைசி நிலையான முல்லைத்தீவு மாவட்டத்தின் காரைத்துறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட பகுதிக்குள் முற்றுகையிடப்பட்டிருந்தபோது, விநாயகம் வன்னிக்கு வெளியே ஒப்பீட்டளவில் பாதுகாப்பான ஓரிடத்தில் இருந்தார். இதன்படி எல்.ரீ.ரீ.ஈயின் ஏனைய மூத்த தலைவர்கள் முள்ளிவாய்க்கால் தோல்வியில் நசுக்கப் பட்டதைப்போல விநாயகம் அழிக்கப்படவில்லை. உண்மையில் எல்.ரீ.ரீ.ஈயினரின் தோல்விக்கு சிறிது முன்னராகவே அவர் இந்தியாவுக்கு பயணமாகி விட்டார்.

அதன்பின்னர் விநாயகம் இந்தியாவை விட்டு ஒரு தென்கிழக்கு ஆசிய நாட்டுக்கு பயணமானார். பிரித்தானியாவில் உள்ள தனது உறவினர்களின் உதவியுடன் தயார் செய்யப்பட்ட ஒரு போலிக் கடவுச்சீட்டின் உதவியுடன் அங்கிருந்து லண்டனுக்குப் பறந்தார். இது 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் - நவம்பர் மாதங்களில் நடைபெற்றது. பிரிட்டனில் சுருக்கமான ஒரு சொற்ப கால வாசத்தை முடித்துக்கொண்டு விநாயகம் கண்டத்தின் பிரதான நிலப்பரப்புக்குள் கடந்து வந்து பரீசில் அரசியல் புகலிடம் கோரினார். அவர் இப்போது பிரான்சுக்கும் மற்றும் ஜேர்மனிக்கும் இடையே பறந்து திரிவதாக கூறப்படுகிறது.

விநாயகம் ஐரோப்பாவில் உள்ள புலிகளின் பல்வேறு வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவினது செயற்பாட்டாளர்களையும் ஒன்று திரட்டி அவர்களை ஒரு நெருக்கமான பின்னலான பிரிவாக வடிவமைத்து அதன் ஏக பொறுப்பாளராக தன்னை திடமாக்கிக் கொண்டார். ஒரு குறுகிய காலப்பகுதியில் நெடியவனுக்கும் விநாயகத்துக்கும் இடையில் ஒரு பணி தொடர்பான உறவு நீடித்தது. மற்றும் இருவரும் மூலோபாயமுள்ள ஒரு கூட்டு பங்காளி முறைக்குள் உள்நுழைந்தனர்.

எப்படியாயினும் இது வெகுகாலத்துக்கு நீடித்து நிற்கவில்லை, விரைவிலேயே ஒருவருக்கொருவர் தம்முள் முட்டி மோதிக் கொண்டனர். விநாயகம் பலம்பெற விரும்பிய அதேவேளை நெடியவனுக்கு தனது அதிகாரத்தை கைவிட விருப்பமிருக்கவில்லை. இந்த அதிகாரப் போராட்டத்தின் மையப்பகுதியாக இருந்தது பணம் என்ற ஒன்றுதான். நெடியவன் - விநாயகம் மோதல் இப்போது பகிரங்கமாக வெளியே சிந்தப்பட்டு மேற்கிலுள்ள புலம்பெயர் சமூகத்தினரிடையே போராடப்பட்டு வருகிறது. இரு பகுதியினரும் தமது பலத்தை வெளிக்காட்டும் களப் பரீட்சைக்காக மேற்கில் பல நகரங்களிலும் கொண்டாடப்பட்டு வரும் மாவீரர் நாளான நவம்பர் 27 இனை தெரிவு செய்து தம்மை தயார்படுத்தி வருகின்றனர்.




## கன்னி ராசி



உத்திரம் 2,3,4, பாதங்கள்
ஹஸ்தம், சித்திரை 1,2,
பாதங்கள் வரை
பெயர் முதல் எழுத்துக்கள் :-
டோ,பி,பூ,ஷ,ன,ட,பே,போ.

நீங்கள் சாந்தமும், அமைதியான சுபாவமும் தசைப்பிடிப்புடன் நல்ல உயரமான தோற்றத்தையும் உடையவர்கள். நிதானமான போக்கும் சதுர வடிவமான முகவமைப்பும் முகத்தில் சிறு தழும்பையாவது பெற்றிருப்பார்கள். சில சமயங்களில் துடிப்புடன் வேகமாகவும் செயற்பட்டு காரிய சாதனைகளைப் புரிவார்கள். அடம்பரமான வாழ்க்கையை வாழடிக்கூடியவர்கள் என்பது தோற்றத்திலே தெரியும்படி உங்களது நடை, உடை பாவனைகள் அமைந்துவிடும்.

மற்றவர்களுக்கு கௌரவமும், நன்மதிப்பும் தருபவர்களாகவும், பண விஷயத்தில் மிகவும் சிக்கனத்தை கையாள்பவராகவும் இருப்பார்கள். பிறருக்கு தம்மால் இயன்ற உதவிகளைப் புரிவார்கள். தெய்வ வழிபாடுகளில் அளவிலா ஆர்வம் உடையவர்கள். பலரும் பாராட்டும் வாழ்க்கையை வாழ்வார்கள். குடும்பத்தில் கட்டுப்பட்டு நடப்பவர்கள், விகடமாகப் பேசவல்லவர்கள். அதிகமான பிரயாண ஈடுபாடு இல்லாதவர்களாகவும் அளவான முதலீட்டில் பிறரது உதவிகளால் தொழில் துறையில் மேம்மையை அடைவார்கள். எந்தப் பிரச்சினையிலும் எளிதாக மீள்வார்கள். சகல வசதிகளையும் உடையவர்கள். இப்படிப்பட்ட உங்களுக்கு 2012 புத்தாண்டின் பலன்தனைப் பற்றி இனிப் பார்ப்போம்.

2012 புத்தாண்டில் அஷ்டம் குரு 2ஆமிட சனியால் உங்களுக்குரிய பணவசதி முக்கியமான தேவைகளுக்கு மட்டும் கிடைக்கும். எடுக்கும் முயற்சிகள் யாவும் ஒன்றுக்குப் பாதியான வெற்றிகளைக் கொடுக்கும். நண்பர்கள் எப்போதும் போல் நடந்து கொள்வார்கள். உறவினர்கள் வருகையால் செலவுகளும் கொஞ்சம் சந்தோஷமும் உண்டாகும். வாகன வசதிகள் குறையாமல் இருக்கும். உங்கள் செயற்பாடுகளில் கொஞ்சம் ஊஷாராக நடந்து கொள்ள வேண்டிய காலகட்டமிது.

சுபகாரியங்கள் கருதி குடும்பத்துடன் மகிழ்ச்சி திருப்தியை அளிக்கும். பெற்றோர்களால் உதவிகளும் உண்டு. தந்தையுடன் நல்லுறவு இணைந்து பல காரிய சாதனையைப் பெறக்கூடும். சகோதர வகையினர் இணக்கம் இருப்பிடம் ஏட்டிக்குப் போட்டி, கோபதாபங்கள் காணப்படும். பெண்களால் வீண் அவமதிப்புத் தோன்றும். மனைவி மூலம் தூஷணையும் உண்டு. வாகன வசதிகள் சிறப்பாக அமையும். புதிய ஆடம்பரப் பொருட்கள், ஆபரண வகைகள் சிறப்பாக வாங்குவீர்கள்.

வாருவாய் திருப்தி தரும் என்றாலும் வரவுக்கும் மீறிய செலவுகள் ஏற்பட்டுக் கொண்டிருப்பதால் கடன்படவும் நேரிடும். எதிர்ப்பு, போட்டி, இடைஞ்சல்கள் எங்கும் எதிலும் தென்படுகிறது. தொழிலில் வேலைப்பளு மிகவும் கூடுதலாக இருக்கும். தொழில் சம்பந்தப்பட்ட பிரயாணங்கள் தவிர்க்க முடியாதபடி அடிக்கடி இருந்து வரும். பொன், பொருட்கள் சேர்ப்பதில் இரட்டிப்புச் செலவும், அதிருப்தியும் இருந்து வரும். பெற்றோராலும், சகோதர வகையினராலும் வேண்டிய உதவிகள் கிடைத்துவரும். இருப்பிடத்தில் அக்கம் பக்கத்தவர்கள் சற்று ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டுக் கொண்டிருப்பார்கள். கடன் நோய், வழக்கு போன்ற இனங்களில் அதிருப்தி இருந்து வரும்.

14-04-2012 வரை செவ்வாய் வக்கிரம் பெறுவதால் வீண் விவகாரங்கள் வலிய வரும். கடன்கள் நெருக்கடி தரும். சொத்துக்கள் விரயம் (அ) அடமான சூழ்நிலைகளுக்கு உட்பட நேரும். சகோதர உதவி தடைப்படும்.

15-05-2012 முதல் 27-06-2012 வரை சுக்கிரன் வக்கிரம் பெறுவதால் தேவையற்ற பிரயாணங்கள் ஏற்படும். சேமிப்பு குறையும். ஸ்தல வழிபாடுகள் நல்லது.

15-05-2012 முதல் 04-08-2012 வரை சனி பகவான் தமது வக்கிர சஞ்சாரத்தின்போது மறுபடி கன்னி ராசிக்குள் சென்று திரும்ப துலாத்திற்கு வருவார். இக்காலம் மறுபடி ஜென்ம சனி கவனமுடன் இருப்பது நல்லது. பிரச்சினைகளை இக்காலத்தில் சந்திக்காமல் தள்ளிப்போட நல்லது.

செய் தொழில் எத்தனை சங்கடங்கள் வந்தாலும் வேலையை விட்டு விடக்கூடாது. புதுவேலை கிடைக்காது அப்படிக் கிடைத்தாலும் அதில் வருவாய் சரிவர இருக்காது என்பதாலும் செய்கின்ற வேலையை எப்பாடுபட்டாவது தக்கவைத்துக் கொள்ள வேண்டும். 17-05-2012 வரை சமாளித்து வந்தால் அதன் பிறகு குரு சாதகமாக வந்து விடுவதால் வேலை வாய்ப்பு ஏற்படும். பதவி வருவாய் உயர்வு, விரும்பிய இடமாற்றம் எதிர்பார்த்த சிறப்புடன் கிடைக்கப்பெற்று செல்வாக்கு உயரும். மொத்தத்தில் இது நிதானமாக உயர்வு தரும் வருடமாகும்.

### பெண்களுக்கு

நீங்கள் இப்போது சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காகவும், பொன், பொருள், சேர்க்கைகளுக்காகவும் அவசரப்பட வேண்டாம். கணவன், மனைவி உறவு நிலை திருப்திகரமாக இருக்கும். குழந்தைகளால் கொஞ்சம் மருத்துவச் செலவுகள் இருக்கும். அவர்களால் சந்தோஷத்திற்கு குறைவிருக்காது. பெற்றோர்களால் கொஞ்சம் ஆதரவு கிடைக்கப்பெறுவீர்கள். உடன்பிறந்த சகோதர வகையில் கொஞ்சம் பிணக்குகள் உண்டாகி பின் சமாதானம் அடைவீர்கள்.

### உத்தியோகஸ்தர்களுக்கு

சில பிரச்சினைகளில் தவித்துக் கொண்டிருப்பீர்கள். நெருக்கடி தரும். படிப்படியாக விலகி வர தைரியம், தெளிவான சிந்தனை தேவை. அதிகாரிகள், ஊழியர்களின் ஒத்துழைப்பு உதவி இருக்கும். உத்தியோக உயர்வு, இடமாற்றம் போன்ற நிலைகளை முயற்சிகளின் பேரில் பெறலாம். உத்தியோக நிலையில் பெரிய மாற்றங்களை எதிர்பார்க்க முடியாது. அசுப பலன்களும் இருந்து வரும்.

### வியாபாரிகளுக்கு

புதிய வர்த்தக யுக்திகள் உதயமாகும். போட்டியாளர்கள் விலகி விடுவார்கள். பற்று வரவுகள் சுலபமாகும். மற்ற பிரச்சினைகள் யாவும் அப்படியே இருந்து வரும். பெரிய முன்னேற்றத்திற்கு இன்னும் கொஞ்சம் காத்திருக்க வேண்டும். முயற்சிக்கேற்ற பலன்களாக இப்போது நடந்து வரும்.

### தொழிலாளர்களுக்கு

தொழில் சம்பந்தப்பட்ட சஞ்சலம் அதிகரிக்கும். தொழில் சங்க விஷயம் லே, ஆப் போன்றவைகள் ஒரு முடிவு பெறும். கெமிக்கல் இம்போர்ட். சம்பந்தப்பட்ட தொழிற்சாலை பணியாளர்கட்டு போனஸ் சலுகைகள் போன்றவைகள் அதிகளவில் கிடைக்கப்பெறும். முதலாளிகளையும் அரசாங்க சலுகைகளை அதிகளவுக்கு எதிர்பார்க்க இயலாதுதான்.

### விவசாயிகளுக்கு

உங்களுக்கு சுமாரான பலன்களை கொடுக்கும். விவசாயத்தில் உழைப்புக்கேற்ற ஊதியம் என்றபடி மகசூல் உண்டாகும். புதுவிதமான எந்த முயற்சியும் இப்போதைக்கு வேண்டாம். இருப்பதை நல்லபடியாகச் செய்யவும்.

### மாணவர்களுக்கு

இப்போது உங்களுக்கு முயற்சிக்குப் பலன் என்பதாக இருக்கும். ஓரளவு கல்வி கேள்விகளில் மார்க் விவகாரங்களில் கவனமாகப் படித்தால் மட்டுமே தேர்வு பெற முடியும். எனவே, கேளிக்கை ஈடுபாடுகளில் கவனத்தைச் செலுத்தாமல் படிப்பில் கவனவத்தைச் செலுத்த வேண்டும்.

# அரசியலுக்கு முதலீடாகும் முல்லைப் பெரியாறு அணை



(திருவனந்தபுரம்)

கேரளாவில் இடது முன்னணி ஆட்சிக்கு வந்தால் முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்டப்படும் என கேரள எதிர்க்கட்சி தலைவர் அச்சுதானந்தன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கேரள எதர்க்கட்சி தலைவர் அச்சுதானந்தன் தலைமையில் கம்யூனிஸ்ட் கூடடணி கட்சியினரும் முல்லைப் பெரியாறு அணையை சென்று பார்வையிட்டனர்.

அவ்வேளை அச்சுதானந்தன், முல்லைப்பெரியாறு அணை கட்டப்பட்டு 116 ஆண்டுகள் ஆகிறது. உலகில் இதுபோன்ற பழமையான அணை கிடையாது. எனவே முல்லைப் பெரியாறில் புதிய அணை கட்ட வேண்டியது அவசியம். இடதுசாரி முன்னணி ஆட்சிக்கு வந்தால் முல்லைப் பெரியாறில் புதிய அணைகட்டப்படும்.

அணை கட்டுவதற்கான பணத்தை இடது முன்னணியே கேரள மக்களிடம் வசூலித்து கொள்ளும். இந்த விவகாரத்தில் பிரதமர், தமிழக மற்றும் கேரள முதல்வர்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என தெரிவித்தார்.

பெரியாற்று அணை விவகாரம் தற்போது இந்தியாவில் பெரியளவில் பேசப்படுகின்ற அதேவேளை பல போராட்டங்களும், அறிக்கைப் போரும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அதிகமான ஆயுதங்களை இந்தியா இறக்குமதி செய்தது

உலகிலேயே இந்தியா தான் மிக அதிகமான ஆயுதங்களை இறக்குமதி செய்து வருவதாக பிரபல வெளிநாட்டுக் கொள்கைகள் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிடும் பத்திரிக்கை தெரிவித்துள்ளது.

சீனா மட்டுமல்ல இந்தியாவும் தனது ஆயுத பலத்தை பல மடங்கு அதிகரித்து வருகிறது. குறிப்பாக சீன எல்லைப் பகுதியில் இந்தியாவின் படைப் பலம் இதுவரை இல்லாத அளவுக்கு பலப்படுத்தப்பட்டுள்ளது. எல்லையின் சில இடங்களில் சீனாவைவிட இந்தியாவின் படை, ஆயுத பலம் அதிகமாக உள்ளது.


2011 ஆம் ஆண்டில் உலகிலேயே மிக அதிகமாக ஆயுதங்களை இறக்குமதி செய்த நாடும் இந்தியா தான். கடந்த 2006-2010 ஆண்டுகளில் உலகின் மொத்த ஆயுத கொள்முதலில் 9 சத வீதத்தை இந்தியா தான் மேற்கொண்டது. அதில் பெரும்பாலான ஆயுதங்கள் ரஷ்யாவிடமிருந்து வாங்கப்பட்டன.

# பிரபல எழுத்தாளரின் கண்கள் தானம்




அஸ்ஸாமைச் சேர்ந்த பிரபல எழுத்தாளர் இந்திரா கோஸ்வாமி இந்தியாவின் ஞானபீட விருது உள்ளிட்ட பல விருதுகளை பெற்றுள்ளார். உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் நேற்று முன்தினம் மரணமடைந்தார்.

இந்நிலையில், கடந்த 2009 ஆம் ஆண்டு அவர் தனது கண்களை தானம் செய்ய தீர்மானித்திருந்தார். அதன்படி, ஸ்ரீசங்கர் தேவ் நேத்ராலயா கண மருத்துவமனைக்கு அவரது கண்கள்தானம் செய்யப்பட்டது.



நன்றி: தினமலர்

# தமிழக பேராசிரியர்கள் இலங்கை வர கோபாலசாமி எதிர்ப்பு



(சென்னை)

கொழும்பில் டிசம்பர் 14, 15 திகதிகளில் இடம்பெறவுள்ள மனித வளக் கருத்தரங்கு, கொழும்பு பல்கலைக் கழகத்தில் டிசம்பர் 19, 20, 21 திகதிகளில் இடம் பெறவுள்ள கருத்தரங்கு என்பவற்றிக்கு தமிழக பேராசிரியர்கள் கலந்து கொள்ளக்கூடாது என வை.கோபாலசாமி அறிக்கை விட்டுள்ளார்.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, தமிழகப் பேராசிரியர்கள் கலந்துகொள்வது தமிழக மக்களின் மனங்களை புண்படுத்துவது போன்றது எனவும் தமிழகத்துப் பேராசிரியர்கள் இலங்கை செல்வதை தவிர்த்திடுமாறு கேட்டுககொள்கிறேன்.

தமிழக அரசும் தமிழகத்தில் உள்ள பல்கலைக கழகங்கள், கல்லூரிகளில் இருந்தும், அரசு நிறுவனங்களில் இருந்தும் யாரையும் இலங்கை செல்ல அனுமதி அளிக்கக்கூடாது என்று ம.தி.மு.க. சார்பில் வலியுறுத்துகிறேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 7 ஆவது நபரைத் தேடுகிறது

(டில்லி)

டில்லி, புனே, பெங்களூர் ஆகிய இடங்களில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்களில் தொடர்புடைய, இந்தியன் முஜாகிதீன் அமைப்பை சேர்ந்த ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏழாவது நபரான அகமது சித்தி பாபா என்ற இம்ரான், தீவிரமாக தேடப்பட்டு வருகிறார். இவர் தான் இந்த குண்டு வெடிப்பு சம்பவங்களுக்குரிய பொருட்களையும், தேவையான நிதியையும் அளித்தவர்.

மேற்கு வங்கம், தமிழகம், பீகார் ஆகிய மாநிலஙகளில் நடத்திய தீவிர தேடுதல் வேட்டையின் பலனாக, இந்த ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி, முகமது சித்திக்,27, டில்லியில் உள்ள ஆனந்த் விகார் பஸ் நிலையத்தில் நின்றிருந்த போது கைது செய்யப்பட் டார்.

சித்திக் கொடுத்த தகவலின்படி, மற்ற ஐந்து பேரும் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 23 ஆம் திகதி, டில்லியில் கோமெனியும், 25 23 ஆம் திகதி, பீகாரின் மதுபனியில், ஜமாலியும் அடிலும் கைது செய்யப்பட்டனர்.

27 ஆம் திகதி சென்னையில் நடந்த சோதனையில், இரஷாத் கானும்,52, அப்துர் ரஹ்மானும் 19 கைது செய்யப்பட்டனர்.

### இந்தியாவும் தமிழ் தேசியக் ...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கைக்குள் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேசி ஒரு இணக்கப்பாடான தீர்விற்கு வரவேண்டும் என்பதை மட்டும் கூட்டமைப்பிற்கு அடிக்கடி இந்தியா ஞாபகமூட்டி வருகிறது.


இந்தியாவின் சொற்களை கூட்டமைப்பு மீற முடியாத கட்டத்தில் தான் அரசுடன் பேசமாட் டோம் என அடிக்கடி அறிக்கை விட்டு விட்டு அரசுடன் பேசி வருகின்றனர்.

இதை விட இந்தியா ஆனநத சங்கரியையே பெரிதாக பார்க்கிறது. இதனால் தான் சங்க ரியை கட்டாயம் இணைக்க வேண்டும் என்று சம்பந்தனிடம் இந்தியா கடுமையாக கூறி விட்டது. மாற்று வழி இன்றி சங்கரியையும் கூட்டமைப்பு இணைத்துள்ளது. இதனால் கூட்டமைப்பில் பலர் கடுப்பாகி உள்ளனர்.

யார் கடுப்பாகினால் என்ன இந்தியாவின் சொல்லைத் தட்டி விட்டு குடும்பங்களைப் பார்க்க இந்தியா போக முடியாதல்லவா! இது விளங்கவா போகிறது புதியவர்களிற்கு.

உலகச் செய்திகள்

# ஈரான்– இங்கிலாந்து மோதல் வலுக்கின்றது



பிரிட்டனில் இருக்கும் ஈரானின் தூதரகம் மூடப்பட வேண்டும் என்றும், அதில் வேலை செய்யும் பணியாளர்கள் அடுத்த 48 மணி நேரத்தில் நாட்டை விட்டுச் செல்ல வேண்டும் என்றும் பிரிட்டிஷ் அரசு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

ஈரானில் உள்ள பிரிட்டன் தூதரகத்துக்குள் எதிர்ப்பாளர்கள் புகுந்து தாக்கிய சம்பவம் நடைபெற்று ஒரு நாட் கழித்து இந்த நடவடிக்கையை பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர வில்லியம் ஹேக் அறிவித்துள்ளார். இதன் தொடர்ச்சியாக நோர்வேயும் ஈரான் தூதரகத்தை தற்காலிகமாக மூடியுள்ளது.

ஈரானில் இருந்த இங்கிலாந்துத் தூதரகம் ஆர்ப்பாட்டக்காரர்களால் தாக்கப்பட்டது. இதுபோன்ற தாக்குதல்கள் அரசின் அனுசரணைகள் சற்றும் இல்லாமல் நடந்திருக்க முடியாது என்று ஹேக் குறிப்பிட்டார். ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள பிரிட்டிஷ் தூதரகத்தை தாம் மூடிவிட்டதாகவும் அங்கிருக்கும் ஊழியர்கள் தற்போது அங்கிருந்து வெளியேற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையேயான ராஜாங்க உறவுகள் மிக, மிக கீழ் மட்டத்தில் இருப்பதாகவும் வெளியுறவுச் செயலர தெரிவித்தார்.

# அடி விழாது என்ற உத்தரவாதம் வேண்டும்




எதிர்காலத்தில் பாகிஸ்தான் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடைபெறாது என உத்தரவாதம் அளிக்கப்பட்டால்தான் ஜெர்மனியில் நடைபெறவுள்ள ஆப்கானிஸ்தான் குறித்து நடைபெறவுள்ள மிக முக்கியமான கூட்டத்தில் பங்கேற்க முடியும் என்று பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரஸா கிலானி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். மேலும் கடந்த 3 ஆண்டுகளில் நேட்டோ படைகள் நடத்திய தாக்குதலில் 72 பாகிஸ்தான் வீரர்கள் உயிரிழந்துள்ளனர். கடந்த வாரம் நடத்தப்பட்ட தாக்குதலை வழக்கமான ஒன்றாக எடுத்துக் கொள்ள முடியாது என்றும் தெரிவித்தார்.

கடந்த வாரம் நேட்டோ படைகள் நடத்திய வான் தாக்குதலில் 24 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதமாக, ஆப்கானிஸ்தான் குறித்து நடைபெற உள்ள சர்வதேச மாநாட்டை புறக்கணிப்பது என பாகிஸ்தான் அமைச்சரவையில் முடிவு செய்யப்பட்டது. இந்தக் கூட்டத்தில் ஐக்கிய நாடுகள சபையின் பொதுச் செயலர் பான் கி மூன கலந்து கொள்கிறார். இந்தக் கூட்டத்தைப் புறக கணிப்பதென பாகிஸ்தான் எடுத்த முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜெர்மனியில் நடைபெற உள்ள இந்தக் கூட்டம் நீண்ட காலத்துக்கு முன் திட்டமிடப்பட்டது. அமெரிக்காவைப் போலவே ஆப்கானில் அமைதியும், ஜனநாயமும் திரும்ப வேண்டும் என்பதில் பாகிஸ்தானும் தீவிரமாக உள்ளது. இந்நிலையில் இந்தக் கூட்டத்தைப் புறக்கணிப்பதென்ற முடிவு அவசர கதியில் எடுக்கப்பட்ட தாகத்தானிருக்கும். எனவே அதை மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# "யோகா" சாத்தானின் வேலை போதகர் குற்றச்சாட்டு



(டெர்னி)

யோகா கலை என்பது சாத்தானின் வேலை என்று வத்திகானின் தலைமை போதகர் ஒருவர் தெரிவித்துள்ளார். இத்தாலியின் டெர்னி நகரில் அண்மையில் இடம் பெற்ற மாநாடு ஒன்றிலேயே வத்திக்கானைச் சேர்ந்த தலைமைப் போதகரான கேபிரியல் அமோர்த் (வயது 85) இதனைத் தெரி வித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஹாரி பாட்டரில் வரும் சாத்தானின் வேலை போன்றது யோகா கலை. அது உடல் மற்றும் மூளையை கட்டுக்குள் கொண்டு வரும் சாத்தானின் மாய தந்திர வேலை. மேலும் அது மறு பிறப்பில் நம்பிக்கை கொண்ட சமயம் சார்ந்தது என்று அவர் தெரிவித்தார். இதேவேளை 'யோகா கலை எனபது மதம் சம்பந்தமானது இல்லை. ஆனால், உடல், உளத்தை சீராக்கும் அசாதாரண கலை. கேபிரியலின் கருத்து மிகவும் மோசமானது என்று இத்தாலிய யோகா அமைப்பு ஒன்று கண்டனம் தெரிவித்துள்ளது.

உடல், உள்ளத்தை கட்டுக் கோபபுடன் ஆரோக்கியமாக வைக்க உதவும் யோகா கலை இந்தியாவில் பண்டைய காலத்தில் தோன்றியது. இக்கலை தற்போது உலகின் பல்வேறு பகுதிகளிலும் பரவியுள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளிலும் பிரபலமாகிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# 50 ஆண்டுகளுக்கு பின் மியான்மரில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர்



கடந்த 50 ஆண்டுகளுக்குப் பின்னர் முதன் முறையாக அமெரிக்காவின் வெளிவிவகாரத் துறை செயலாளர் ஹிலாரி கிளிண்டன் மியான்மர் நாட்டில் மூன்று நாள் சுற்றுப்பயணம் மேற் கொண்டார்.

சுற்றுப்பயணத்தின் போது அவர் இருநாடுகளிடையே நல்லுறவை மேம்படுத்துவது அரசியல் மற்றும் பொருளாதார மாற்றங்கள் குறித்தும் ஜனாதிபதி தெயின் செயின், வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஊனாமவூங் மற்றும் நாடாளுமன்ற சபாநாயகர் யூகின் ஆகியோரையும் சந்தித்து பேச உள்ளார்.

மேலும் தேசிய ஜனநாயக கட்சித் தலைவர் ஆங்சாங் சூயியையும் சந்தித்து பேச உள்ளதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 1955ம் ஆண்டு பெப்ரவரி மாதம் அமெரிக்காவின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜோன் பாஸ்டர் டல்லஸ் என்பவர் மியான்மர் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அதன் பின்னர் தற்போது ஹிலாரி கிளிண்டன் சுற்றுப் பயணம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலஞ்சம் குறைந்த நாடுகளில் நியூசிலாந்திற்கு முதலிடம்

குறைந்த அளவில் லஞ்சம் வாங்கும் நாடுகள் குறித்த ஆய்வு சமீபத்தில் நடத்தப்பட்டது. இதில் நியூசிலாந்து முதலிடத்தில் உள்ளது. லஞ்ச ஒழிப்பு குறித்து விழிப்புணர்வு, உலகம் முழுவதும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு அதிகளவில் லஞ்சம் வாங்கும் நாடுகளில் முதல் நிலையில் இருந்த டென்மார்க் மற்றும் சிங்கப்பூர் ஆகியன தற்போது முறையே 2வது மற்றும் 5வது இடங்களில் உள்ளன.

8வது இடத்தில் அவுஸ்ரேலியாவும், சுவிட்சர்லாந்தும் உள்ளன. டி.ஐ நிறுவனம், 183 நாடுகளில் லஞ்சம், பயங்கரவாதம் குறித்த 17 ஆய்வுகளை நடத்தியது. குறைந்த அளவு லஞ்சம் வாங்கும் நாடுகளில் நியூசிலாந்திற்கு 9.5 புள்ளிகளும், அவுஸ்ரேலியாவிற்கு 8.8 புள்ளிகளும், வட கொரியா மற்றும் சோமாலியா ஒரு புள்ளிகளும் பெற்றுள்ளன. இந்தப் பட்டியலில் 3.6 புள்ளிகளுடன் சீனா 75வது இடத்தில் உள்ளது. 8 புள்ளிகளுடன் ஜப்பான் 14வது இடத்தில் உள்ளது.

# பதிவிருக்கப் பெட்டகம்

தமிழ் இலக்கியத்தில் மரபாக காதலை தெய்வாம்சமான நிலையில் வைத்துப் பூஜிப்பது இருக்கத்தான் செய்கிறது. அந்தவகையில் பார்த்தால் ஜி.நாகராஜனும், அருணகிரிநாதரும் ஒரே ஆள்தான். அருணகிரிநாதர் மதத்திற்குள்ளாகத் தன்னை நிறுத்திக்கொண்டு தனது இச்சைகளைப் பாவம் என்று அறிவித்துச் சரணாகதி அடைந்துவிட்டார். ஆனால் ஜி.நாகராஜனுக்கு அது பாவமில்லை. பொதுவில் இச்சையைக் கொண்டாடுவது என்பது தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. உடனே குற்றமனப்பாங்கு உருவாகிவிடும். கடவுள், பாவம் என்று எதையாவது போட்டு இச்சையை மறைத்துவிடுவோம். நாகராஜன் இச்சையை அனுமதிக்கிறார். அதன் முட்டுச்சந்துகளில் அலைந்து திரிகிறார். ஆச்சரியம் என்னவென்றால் தமிழ் வாசகனுக்கு இரண்டு பேருமே சரி என்று தோன்றுகிறது. இதுபோன்ற விஷயங்களில் வாசகர்கள், முடிவு செய்வதை விடவும் பகிர்ந்து கொள்வதே போதும் என்று நினைத்து விடுகிறார்கள். **– தேவதச்சன்**

பண்பாடு என்பதை நாம் இப்படி வரையறுத்துக் கொள்ளலாம், ஒரு உடலினை சமூகத்திற்கு ஏற்ப முன் நிறுத்துவதற்காக அதன் மீது எழுதப்பட்டிருக்கும் ஒரு சங்கேத மொழி என்று. அதாவது, ஒரு உடலானது என்ன செய்ய வேண்டும்? எப்படி தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள வேண்டும்? எப்படி தனது தானை (mjhtJ ego-it) கட்டமைத்துக் கொள்ள வேண்டும்? எதற்காக மகிழ்ச்சி அடைய வேண்டும்? எதற்காக துன்பம் அடைய வேண்டும்? என்பதை ஒரு கண்காணிப்பு கருவி போலக் கண்காணித்து உடலை வழிநடத்தும் ஒரு எந்திரம். அதற்காக அது கண்காணிக்கும் ஒரு முக்கிய தளம் பாலியலாகும். பாலியலை ஒடுக்குவது அல்லது முறைப்படுத்துவதன் மூலம் பண்பாடானது சமூக அமைப்பை அதன் ஆதிக்க வழிவிலேயே காக்கிறது. அதற்காக சில உடலியல் வேட்கைகளை (desires) புறமானதாக ஒதுக்கி அதற்கு தண்டனை வழங்கும் அதிகாரத்தை பெற்றுள்ளது. **– ஜமாலன்**

திருமணம் என்பது, 'இவள் எனக்கு மட்டும்தான் சொந்தம். வேறு யாரும் கிட்ட வந்தால் கொன்றுவிடுவேன்' என்று ஆண்கள் தங்களுக்குள் போட்டுக்கொள்ளும் ஓர் ஒப்பந்தம். **– லெவி ஸ்ட்ரோஸ்**

பாலியல் நாட்டமானது வெட்கப்படத்தக்க தனிமனித இரகசியமாகவும், சமூக மனிதனை எடுத்து நிறுக்கும் எடைக்கல்லாகவும், குடும்ப கௌரவத்தைத் தகர்க்கவல்ல வெடிமருந்தாகவும், சமூகத்தை வழிநடத்தும் குற்றவியல் சட்டமாகவும் கற்பிக்கப்படுகிறது. ஒரு கற்பிதமே அடிப்படை ஒழுக்கமாகும்போது, ஒழுக்க மீறல்களே அதன் நிரந்தரக் குறையாகி விடுகின்றன. **– அ. மார்க்ஸ்**

உடல் கொண்டு பிறந்த உயிர் எது ஒன்றையும் தன் போக்கில் சுழற்றி எறிந்து கவ்விக் கொள்ளும் காமத்தின் சூறைக்காற்று. **– பி.தொ.நி.கு. நாவலில்**

உடம்பு என்ற ஒட்டைப் பாத்திரத்தில் இத்தனை புரிந்துகொள்ளப் படாத புதையல்களா? **– வைரமுத்து**

இளமை எனது புலன்களில் ஒரு சூறாவளியைக் கட்டவிழ்த்துவிட்டது. எனது உடலின் விருப்பங்களுக்கு எதிராகக் கதவுகளை அடைத்துவிட நான் விரும்பவில்லை. மாறாக, நான் அதன் கொண்டாட்டங்களில் காணாமல் போகவே ஆசைப்பட்டேன். **– சாரா ஜோசப்**

மது, கவிதை போல ஒழுக்கமும் ஒரு போதைப் பொருளே. மதுவையோ கவிதையையோ ஒழுக்கத்தையோ பருகி வெறியேற்றிக் கொள்ளுங்கள். **– சார்ள்ஸ் போதலேர்**

இந்தக் காலத்துப் பிள்ளைகளைப் பாருங்கள். க்ரூப் ஸ்டடி என்கிறார்கள், ப்ரொஜெக்ட் என்கிறார்கள். இரவு முழுதும் தன் வகுப்புத் தோழி வீட்டில் சேர்ந்து படித்துவிட்டு காலையில் வருகிறான் என் மகன். நான் படித்த காலத்தை நினைத்தால் அழுகைதான் வருகிறது. கலவன் பாடசாலை என்றுதான் பெயர். ஆனால் ஒன்றாம் வகுப்பிலிருந்து பதினோராம் வகுப்பு வரை சக மாணவிகள் யாரிடத்திலும் நாங்கள் யாரும் ஒரு வார்த்தை கூடப் பேசியதில்லை. நினைத்துப் பார்த்தால் நம்பவே முடியவில்லை. பதினொரு வருடங்கள். அப்படியே தப்பித் தவறிப் பேசிவிட்டால் 'ரவி – காஞ்சனா காதல்' என்று அத்தனை சுவர்களிலும் கரித்துண்டால் எழுதிவிடுவான்கள். பிறகு அந்தப் பெண் பள்ளிக்கு வருவதையே நிறுத்தி விடுவாள். ஒரு மாணவனின் ஒரு சொல் ஒரு மாணவியின் வாழ்க்கையையே திசை திருப்பிவிடும். **– சாரு நிவேதிதா**

அடிப்படையில் மனித இனத்தை இகழ்ச்சிக்குரியதாகக் கொள்ளாத நோக்கம் தெளிவாகத் தெரியும்போது பண்பாட்டுப் பிறழல் நம்மை உபாதைப்படுத்தக் கூடாது. **– அசோகமித்திரன்**



# இலங்கைப் பிரச்சினையில் சர்வதேசம் தீர்வுகளைத் திணிக்க முடியாது

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் எந்த வொரு சர்வதேச நாடும் தீர்மானங்களை நிறைவேற்றுவத ற்கோ, தீர்வுகளைத் திணிப்பதற்கோ, ஒருபோதும் அனுமதிக்கப்படமாட்டாது என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளு மன்றத்தில் நடைபெற்ற வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் வெளிவிகார அமைச்சர் தொடர்ந்தும் குறிப்பிடுகையில், 2013 ஆம் ஆண்டு இலங்கையில் பொதுநலவாய மாநாட்டை நடத்த சர்வதேச ரீதியில் 54 நாடுகள் இணககம் தெரிவித்துள்ளன. அத்துடன், தமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதாகவும் கூறியுள்ளன. இவ்வாறான நிலையில் பொதுநலவாய நாடுகள் தொடர்பில் எதிர்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்வி கவலையளிக்கின்றது.

அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் முரண்படுவதாகவும், சிறந்த உறவுகளைப் பேணுவதில்லை எனவும் எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சுமத்துகின்றார். இந்த குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லை.

இலங்கைக்கு எதிராக ஒரு சில நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சிகளை நாம் சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் முறியடித்திருக்கின்றோம். உறவுகள் பேணப்படாதிருந்தால் இது சாத்தியமாகி இருக்காது.

சர்வதேச நாடுகளுடனான எமது உறவு சிறப்பாக பேணப்பட்டு வருகின்றது. எனினும் இலங்கை தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு எந்தவொரு பிறநாட்டிற்கும் உரிமை கிடையாது.

அதேபோல் எமது நாடு குறித்து தீர்வுகளைத் திணிக்கவும் முடியாது. அதற்கு அனுமதிக்கவும் மாட்டோம்.

எமது நாட்டு விடயங்களை நாமே கையாள்வோம். ஆனாலும் பகைமை மற்றும் பொறாமைகளை நாம் வளர்க்கவில்லை. அதனால்தான் சர்வதேச பிரதிநிதிகள் இலங்கைக்கான விஜயங்களை மேற்கொள்கின்றனர்.

அந்த வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வகட்சி பிரதி நிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. எனவே எமது நாட்டின் வளமான எதிர்காலத்தை உறுதிப் படுத்துவதற்காக அரசுடன் இணைந்து சேவையாற்ற வருமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கின்றேன் என்றும் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சர்வக்கட்சி பிரதி நிதிகள் குழுவொன்று அடுத்தவாரமளவில் இலங்கை வரவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கொள்ளையில் தொடர்பு பொலிஸ் அதிகாரி கைது




(கொழும்பு)

கொள்ளைச் சம்பவம் ஒன்றுடன் தொடர்புடைய பொலிஸ் உயரதிகாரி ஒருவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். புத்தளம் பிரதேசத்தில் இடம் பெற்ற சம்பவம் தொடர்பாகவே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். புத்தளம் - மன்னார் வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரிலேயே இந்த பொலிஸ் பரிசோதகர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் 70,000 ரூபா பணம் அண்மையில் கொள்ளையிடப்பட்டது. இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய எட்டு பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் வழங்கிய தகவலின் பேரிலேயே கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்



ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மொஹான் லால்கிறேரோ ஆளும் கட்சியில் இணைந்து கொண்டார். நேற்று முன்தினம் நடை பெற்ற வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சிக்கு ஆதரவாக வாக்களித்துள்ளார். ஆளும் கட்சியில் புதிதாக இணைந்து கொண்ட இவரை ஆளும் கட்சி உறுப்பினர்கள் வரவேற்றுள்ளனர். நாடாளுமன்றிற்கு சமூகமளித்து ஜனாதிபதியையும் சந்தித்துப்பேசியுள்ளார்.

## கணினிக் கல்வியை மேம்படுத்த அமெரிக்க அரசாங்கம் கடனுதவி

(கொழும்பு)

நாட்டின் அறிவு சார்ந்த பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு இரண்டாம் நிலை கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் ஐக்கிய அமெரிக்கா 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க முன்வந்துள்ளது.இதற்கான கடனை தவணை முறையில் இலங்கைக்கு வழங்குவது தொடர்பான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

USAID
FROM THE AMERICAN PEOPLE

இந்த திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் கணினிக் கல்வியை மேம்படுத்த திட்டம் வகுப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.மாகாண மட்டத்தில் அமுல்ப்படுத்தப்படும் இந்த திட்டமானது மத்திய மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஆதரவுடன் மாகாண கல்வி அமைச்சினால் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போதைப்பொருள் விற்பனையில் கைதாவோருக்கு புனர்வாழ்வு

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதங்களுக்குள் போதைப்பொருள் விற்பனையில் ஈடுப்பட்ட 102 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானவர்களில் பெரும் பாலானோர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு பிரதேசத்தில் போதைப்பொருள் விற்பனையை ஒழிப்பதற்காக 21 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்படுகின்ற போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுகின்றவர்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக தனியான பொலிஸ் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் கைது செய்யப்படும் போதைப் பொருள் பாவனையாளர்களுக்கு நீதிமன்ற உத்தரவுக்கமைய புனர்வாழ்வளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்தேகநபர்களை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும் போது வழக்குச் செலவுகளுக்கு பணம் தேடும் பொருட்டு அவர்கள் மேலும் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபடுவதாக அவர் சுட்டிக்காட்டினார். இதனால் சந்தேகநபர்களுக்கு புனர்வாழ்வளிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக பொலிஸ் உயரதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

## அதிவேக நெடுஞ்சாலையில் பேருந்து சேவை; தீவிரமாக ஆராய்கிறது போக்குவரத்து சபை

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் பயணிகள் போக்குவரத்திற்கான பேருந்து சேவைகளை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி முதல் இரண்டு பேருந்துகளை சேவையில் ஈடுபடுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பின்னர் அந்தத் தீர்மானம் கைவிடப்பட்டதாக இலங்கை போக்குவரத்து சபை குறிப்பிட்டுள்ளது. தெற்கு அதிவேக வீதியில் பேருந்து போக்குவரத்திற்கு உகந்தவாறு ஒடு பாதையில் இடவசதி காணப்படாமையே இதற்குக் காரணம் என இலங்கை போக்குவரத்து சபையின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

திடீரென பேருந்துகளில் இயந்திரக் கோளாறு ஏற்படும் சந்தர்ப்பங்களில் அதிவேக வீதியில் அதற்கான இடவசதிகள் இல்லை எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அந்த வீதியின் ஊடாகப் பயணிக்கும் ஏனைய வாகனங்களுக்கு, இயந்திரக் கோளாறுக்கு இலக்காகும் பேருந்துகள் இடையூறாக அமையலாம் எனவும் அவர் தெரிவித்தார்.



கட்டண விபரம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இந்தப் பிரச்சினை காரணமாகவே தெற்கு அதிவேக வீதியில் இதுவரை பேருந்து போக்குவரத்திற்கு அனுமதியளிக்காதிருப்பதாக இலங்கை போக்குவரத்து சபை சுட்டிக்காட்டியுள்ளது

## வங்காளவிரிகுடாவில் தாழமுக்கம் காற்றின்வேகம் அதிகரிக்கலாம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் நிலவுகின்ற தாழமுக்கம் காரணமாக நாட்டின் பொரும்பாலான பகுதிகளிலும் கிழக்கு, தென் மற்றும் தென் கிழக்கு கடற்பிரதேசங்களிலும் காற்றின் வேகம் அதிகரிக்கலாம் என இடர் முகாமைத்துவ நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. இந்தப் பிரதேசங்களில் மணிக்கு 50 தொடக்கம் 70 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என அந்த நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்தப் பிரதேசங்களின் மீனவர்களை எச்சரிக்கையுடன் இருக்குமாறு இடர் முகாமைத்துவ நிலையம் அறிவுறுத்தியுள்ளது.

இது தொடர்பான அறிக்கை வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவ நிலையத்தின் நடவடிக்கைகள் 24 மணித்தியாலங்களும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அத்துடன், கடற்றொழில் அமைசசின் அதிகாரிகளுடன் இணைந்து சீரற்ற வானிலை தொடர்பான தகவல்களை முன்கூட்டியே வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது.



இதேவேளை, அண்மையில் ஏற்பட்ட பலத்த காற்று காரணமாக தொடர்ந்தும் 15 பேர் காணாமல் போயுள்ளதாகவும் இதுவரை 28 மரணங்கள் பதிவாகியுள்ளதாகவும் இடர் முகாமைத்துவ அமைச்சினால் பாதிககப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்

## இலங்கையர்கள் அனைவருக்கும் கணினிகள் கிடைக்க புதிய திட்டம்





(கொழும்பு)

இலங்கையின் அனைத்து பிரஜைகளுக்கும் கணினிகள் கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில கடந்த செவ்வாய்க்கிழமை முதல் திட்டம் ஒன்று அமுல்செய்யப்பட்டுள்ளது. இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனம் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இதன் அடிப்படையில் மாதம் ஒன்றுக்கு 2341 ரூபாவை மாத்திரம் செலுத்தி இலங்கையர் எவரும் கணினிகளை கொள்வனவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலம் 8 மணித்தியாலங்களில் ஒருவர் கணினி சொந்தக்காரராக முடியும்.

எச்பி ரக மடிகணினிகள் இந்த திட்டத்தின் கீழ் இலங்கையர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபன தலைவர் பிரதீப் குணவர்த்தன தெரிவித்துள்ளார்

# பொலிஸ் சேவைக்கு ஆட்சேர்ப்பு யாழ். பெண்களுக்கு ஆர்வமில்லை




பொலிஸ் சேவைக்கு பெண்களை இணைத்துக் கொள்ளும் வகையில் யாழ். பொலிஸ் தலைமையகம் மேற்கொண்ட நடவடிக்கைக்கு எதிர்பார்த்த அளவில் பயன்கிடைக்கவில்லை.

இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கையின் போது பதினொரு பேர் மட்டுமே பொலிஸ் சேவைக்காக இணைந்துக்கொள்ளப் பட்டிருக்கின்றனர்.

பெரும் எதிர்பார்ப்புடன் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்கு உரிய பயன் கிட்டவில்லை என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கான ஆட்சேர்ப்பு தெரிவுப் பரீட்சை கடந்த 3 தினங்களாக யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

பெண் உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரைத் தெரிவுசெய்யும் பரீட்சையில் இதுவரை 11 பெண்கள் மட்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (எஸ்)

# பொறியியலாளர் நியமனம்

யாழ். வலயப் பாடசாலை வேலைகள் பகுதிக்கான பொறியியலாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேற்படி பாடசாலை வேலைகளை கவனிபபதற்காக ஏ.சத்தியசீலன் (தொழிலநுட்ப அலுவலர் தரம் - I) வடமாகாண கல்வி அமைச்சினால் உடன் செயற்படும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதுவரை காலமும் தென்மராட்சி வலயப் பாடசாலை வேலைகள் பகுதிக்கான தொழிநுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ,136)

# பொலிஸாரின் நடமாடும் சேவை நாளை நெல்லியடியில்

வடமராட்சிப் பகுதியில் பொலிஸாரால் நடமாடும் சேவை ஒன்று நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாளை சனிக்கிழமை தேவரையாளி இந்து கல்லூரியில் நடைபெறவுள்ள இந் நடமாடும் சேவையில் காணாமல் போனவர்கள், வைத்திய சேவை, சிறுவர் மற்றும் மாணவர் துஷ்பிரயோகங்கள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் போன்றவற்றுக்கான ஆலோசனைகளும் சேவைகளும் இடம்பெறவுள்ளதுடன் பொதுச் சுகாதாரம் சம்பந்தமாகக் கரவெட்டி பொதுச் சுகாதார வைத்தியர்களின் ஆலோசனையும் இடம்பெறவுள்ளதாக நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (116)

# வடக்கின் அபிவிருத்திப் பணிகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர் உதவவேண்டும்

## அழைப்பு விடுகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

வடக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்திப் பணிகளுக்கு புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழ்மக்கள் பெருமளவில் பங்களிப்புச் செய்ய வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெளிநாட்டுத் தமிழர்கள் வடக்கு அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யமுடியும். வடக்கை அபிவிருத்தி செய்வதற்கும் அங்கு வாழும் மக்களுக்கு உதவுவதற்கும் நாம் பல பணிகளை ஆற்றிவருகின்றோம். வடபகுதி மக்களுக்கு பொழுதுபோக்கு அம்சங்களை வழங்க வேண்டியுள்ளது. அது மாத்திரமல்ல விளையாட்டு, ஓய்வு நேரப் பொழுது போக்கு என்பவற்றிற்கு அதிகளவில் வசதிகளை ஏற்படுத்த வேண்டியுள்ளதோடு அதிகளவில் ஹோட்டல்களையும் நிர்மாணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

இதன் பொருட்டு தனியார் துறையினரும் வெளிநாடுகளில் வாழ்கின்ற தமிழ் மக்களும் செயலூக்கத்தோடு செயற்பட முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். மேலும் வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கை தமிழமக்கள் இலங்கை மீதும் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் மீதும் கவனம் செலுத்த வேண்டிவர்களாக இருக்கின்றார்கள் அவர்கள் இலங்கைக்கு வந்து தமது நேசகரங்களை நீட்டவேண்டிய தருணம் இதுதான். இலங்கை தமிழ் வர்த்தகர் ஒருவர தற்பொழுது யாழ்ப்பாணத்திற்கு ஹெலிக்கொப்டர் சேவையொன்றை ஆரம்பித்துள்ளார். வெளிநாடுகளில் வாழ்கின்ற இலங்கை தமிழ்மக்கள் இது போன்று பல சேவைகளை வழங்கமுடியும்.

மக்கள் சுதந்திரமாக தாம் விரும்பியவாறு இப்பொழுது யாழ்ப்பாணத்திற்குச் செல்ல முடியும். நான் யாழ்ப்பாணத்திற்கான அதிவேகப் பாதை அமைப்பதற்கான நடவடிக்கையை எடுப்பேன். அதன மூலம் பிரயாண நேரத்தில் மூன்று மணித்தியாலத்தை குறைத்துக்கொள்ள முடியும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

# மனித உரிமை விடயங்களில் அச்சப்படுகிறது அரசு

## என்கிறார் ரணில்



மனித உரிமைகளை பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டிருக்கும் அரசாங்கம் மனித உரிமை விடயங்களுக்கு அச்சம் காட்டிவருவதாக எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் சரத் பொனசேகாவிற்கு அஞ்சுவதாகவும் தனது நாடாளுமன்ற உரைக்கும் அரசு பயப்படுவதாகவும் பொதுநலவாய நாடுகள் உச்சிமாநாட்டில் மனித உரிமை ஆணையாளர் ஒருவரை நியமிப்பது வரைக்கும் அரசு அச்சப்படுவதாகவும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர் மேலும் கூறுகையில்,

சரத் பொன்சேகா நாடாளுமன்ற உறுப்பினர் என்பதால் அவருக்கு எதிராக சபாநாயகரின் அனுமதியுடன் மாத்திரமே வழக்குத் தாக்கல செய்யவேண்டும் எனவும் அதனை மீறி அவருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளதால் அதனை ஏற்காது தான் வழக்கு விசாரணைகளுக்குச் செல்லவில்லை என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பொன்சேகாவிற்கு எதிரான வழக்குகளை வாபஸ பெற வேண்டும் எனவும் சபாநாயகரின் தீர்மானங்கள் அவராலேயே வெளியிடப்பட்டால் அது மிகவும் சிறந்தது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### நாடாளுமன்றத்...

இதில் அரசதரப்பு சார்பில் அமைச்சர்களான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நிமல் ஸ்ரீபால டி சில்வா, சஜின்வாஸ் ஆகியோரும் தமிழ்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தலைவர் சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.சுமந்திரன் ஆகியோர் அடங்கிய குழுவும் பங்குபற்றினர். அடுத்த சந்திப்பு 5 ஆம் 6 ஆம் திகதிகளில் இடம்பெற உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### ஒரே நாடு...

பயங்கரவாதத்திற்கு ஆதரவ ளிப்போரே பாதுகாப்புச் செலவு கள் குறைக்கப்பட வேண்டு மென்று கோரி வருகின்றனர். பாதுகாப்புச் செலவுகளை ஒரு முதலீடாகவே நாம் கருதுகின்றோம். சுற்றுலாப் பயணி களின் வருகையில் சாதனை படைக்கப்பட்டுள்ளது. உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமையினால் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

புலிகள் வடக்கைக் கைப்பற்றியிருந்த காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு இருக்கவில்லை என்பது அவர்களது மனச்சாட்சிகளுக்குத் தெரியும் என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார.

### நாடாளுமன்ற...

அதில் கலந்து கொண்டிருக்காது. மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை மாற்றி அதற்கு ஒப்பான ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை கொண்டு வருவதைவிட மாற்று அரசாங்கத்தையே கொண்டுவர வேண்டும். அந்த மாற்று குழு மக்கள் விடுதலை முன்னணியே. நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைப்பது நாட்டு மக்களை ஏமாற்றவே ஆகும் நாடாளுமன்றத் தேர்வுக் குழுவில் அங்கம் வகிப்பதில்லை என மக்கள் விடுதலை முன்னணி ஏகமனதாக தீர்மானித்துள்ளதென அவர் மேலும் தெரிவித்தார்.

### அரசியல்...

அநுராதபுரம் சிறைச்சாலையில் வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தங்களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இவர்கள் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கேட்டுக்கொண்டனர்.

அத்துடன், வவுனியா, மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கைதிகள் தங்களை வவுனியா சிறைச்சாலைக்கு மாற்றும் படியும், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் அந்தந்த மாவட்டங்களுக்கும் தங்களை மாற்றும் படியும் கேட்டுக்கொண்டதாக செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகள் பலரின் வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு தம்மிடம் பணவசதி இல்லையென அவர்கள் தம்மிடம் தெரிவித்ததாகவும் செல்வம் அடைக்கலநாதன் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### முன்னாள்...

முன்னாள் நீதியரசர் தீர்ப்பளித்தபோது அவரது நடவடிக்கைகளில் அரசாங்கம் குறை காணவில்லை என்றும் தயாசிறி சுட்டிக்காட்டியுள்ளார்.


### 13 வைத்தியர்களுக்கு...

பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையிலான குழுவினர் ஆளுநருக்கு எடுத்து விளக்கினர்.

இதனையடுத்து 60 தொடக்கம் 67 வயது வரையான 13 வைத்தியர்களுக்கு சேவை நீடிப்பினை வழங்குவதற்கான அனுமதியை ஆளுநர் அளித்துள்ளார்.

### பலமான எதிர்க்கட்சி...

அரசுக்கு ஆதரவளிப்பது குறித்து முடிவெடுப்பது அவரவர் மனசாட்சியைப் பொறுத்ததாகும். ஒருவரின் மனசாட்சிக்கு தடைபோட முடியாது. சக்திமிக்க எதிர்க்கட்சியை எங்களால் உருவாக்க முடியாது. அதனை அவர்களேதான் செய்யவேண்டும். எனினும் மக்களுக்கு எதிராக அல்லது மக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் வகையிலான எதிர்க்கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக எங்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்க முடியும். ஜனநாயக அடிப்படையில் தெரிவாகியுள்ள அவர்கள் ஜனநாயக முறைக்கு ஏற்ப மக்கள் நலனுக்காக செயற்படுவதும் அவர்கள் பொறுப்பாகும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.



# யாழிலும் நினைவு கூரப்பட்ட உலக எயிட்ஸ் நோய் தினம்




(யாழ்ப்பாணம்)

உலக எயிட்ஸ் நோய் தினமான நேற்று எயிட்ஸ் நோயினால் காவு கொள்ளப்பட்டவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி இரண்டு நிமிட நேரம் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் இந்நோயினைக் கட்டுப்படுத்துவதற்கு யாழ்.குடாநாட்டில் விழிப்புணர்வு நடவடிக்கை அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

உலக எயிட்ஸ் நோய் தினமான டிசம்பர் முதலாம் திகதியைக் குறிக்கும் வகையில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையால் யாழ். நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

முற்பகல் 10.00 மணியளவில் ஆரம்பமாகிய இந்நிகழ்வு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் பவானி பசுபதிராசா, தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்திருந்த போப் பவுண்டேஷனின திட்டப் பணிப்பாளர் வைத்தியர் அசோக்குமார் மலேரியா நோய்த் தடுப்பு அதிகாரி சிவபாதம் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட அனைவரினதும் கைகளில் மெழுகுவர்த்தி ஏந்தி இது வரையும் எயிட்ஸ் நோய் காரணமாக உயிர் நீத்தவர்களுக்கு இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தப்பட்டது.

தொடர்ந்து எயிட்ஸ் நோயின் விழிப்புணர்வை ஏற்படுத்தும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. துளிர்கள் நிறுவனத்தினர் இக் கலை நிகழ்வினை வழங்கினர். தொடர்ந்து ஆ.கேதீஸ்வரன் ரவீந்திரன், யாழ்.போதனா வைத்தியசாலை பாலியல் நோய் நிபுணர் வைத்தியர் கணேசலிங்கம், தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்த போப் பவுண்டேஷன் திட்ட இயக்குநர் வைத்தியர் அசோக்குமார் ஆகியோர் பாலியல் நோய்களும் இதற்கான விழிப்புணர்வு நடவடிக்கைகள் குறித்தும் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவை வைத்திய அதிகாரிகள், சுகாதார சேவையினர், வடமாகாண சுகாதார அமைச்சு அதிகாரிகள், பத்திரிகையாளர்கள் ஆகியோா கலந்து கொண்டு சிறப்பித்தனர். (பா)

## வன்னியில் வைத்தியசாலைகள் புனரமைப்பு

யுத்தகாலத்தின்போது வட பகுதியில் சேதமடைந்த நான்கு வைத்தியசாலைகளை புனர்நிர்மாணம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையையும் முழங்காவில் ஆதார வைத்தியசாலையையும் கிளிநொச்சியில் பூநகரி பிரதேச வைத்தியசாலையையும் பளை வைத்தியசாலையையும் புனரமைப்புச் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நாடாளுமன்றத்தில் விடுத்த கோரிக்கைக்கமைய இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைகளின் அபிவிருத்திப் பணிகளுக்கென 23 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது.

## மேலும் 95 இலங்கையர் அவுஸ்ரேலியாவில் தஞ்சம்

அகதி அந்தஸ்து கோரி மேலும் 95 இலங்கையர்கள் படகுகள் மூலம் அவுஸ்ரேலியாவின் கிறிஸ்மஸ் தீவைச் சென்றடைந்துள்ளதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சுமார் 107 பேரை ஏற்றிய படகு நேற்று முன்தினம் புதன்கிழமை கிறிஸ்மஸ் தீவை வந்தடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வந்தவர்களில் 95 பேர் இலங்கையர்களும் இரண்டு இந்தோனேசிய படகோட்டிகள் உள்ளடங்களாக 8 ஈராக்கியர்களும் அடங்குவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

அகதிகள் வருகையால் அவுஸ்ரேலியா பாரிய சிக்கல்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் இலங்கையில் 2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின் அதிகமான இலங்கையர்கள் அகதி அந்தஸ்து கோரி அவுஸ்ரேலியாவிற்கு படகுகள் மூலம் வருவதாகவும் அவுஸ்ரேலிய குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ் பொவன் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரி கடந்த மாதம் படகுகள் மூலம் 892 பேர் வந்ததாகவும் இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 3708 பேர் வந்துள்ளதாகவும் அவுஸ்திரேலிய குடிவரவுத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## காலநிலை மாற்றத்தால் இலங்கைக்கும் ஆபத்து

### ஐ.நா.வின் ஆய்வில் தகவல்

(கொழும்பு)

காலநிலை மாற்றம் காரணமாக கடல் மட்டம் உயரும்போது இலங்கையிலும் அதன் தாக்கம் ஏற்படலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித குடியிருப்புக்கான திட்டத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் இது கண்டறியப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள மொரட்டுவை பல்கலைக்கழகத்தின் கட்டட வடிவமைப்பு பீடத்தின் பேராசிரியர எஸ்.மகாநாம, வறண்ட வலயப் பகுதியான மட்டக்களப்பு, ஈர வலயமான நீர்கொழும்பு ஆகிய கரையோர நகரங்கள் தெரிவு செய்யப்பட்டு தாங்கள் ஆய்வுகள் மேற்கொண்டதாக தெரிவித்துள்ளார்.

அத்துடன் அடுத்த முப்பது, நாற்பது ஆண்டுகளில் விஞ்ஞானிகளினால் எதிர்வு கூறப்பட்டது போல் கடல் மட்டம் வெகுவாக உயருமானால் மட்டக்களப்பு நகர கரையோரத்தில் 20 சதவீதமும் நீர்கொழும்பு நகர கரையோரத்தில் 15 சதவீதமும் தாழ்ந்து போகும் அபாயம் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆயினும், இத்தகைய பாதிப்பு ஏற்படலாம் என உறுதியாக எதிர்வு கூற முடியாது எனக் குறிப்பிட்ட அவர், இத்தகைய தாக்கங்களை தடுப்பதற்குரிய திட்டமொன்று தங்களால் தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் அதனை செயற்படுத்துவதற்கு நிதிப்பிரச்சினை தடையாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இத்திட்டத்திற்கு நோர்வே உதவ முன் வந்துள்ளதாக தெரிவித்த அவர், நோர்வேயின் நிதியுதவி கிடைக்குமானால் தங்களின் செயல் திட்டத்தை ஓரளவாவது செயற்படுத்த முடியும் எனக் கூறியுள்ளார்.

## அநுராதபுர தமிழ்க் கைதிகளுக்கு புலம்பெயர் அமைப்புகளுடன் தொடர்பு

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் கைதிகளுக்கு புலம்பெயர்ந்த தமிழர் அமைப்புக்களுடன் தொடர்புகள் இருந்துள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த 27 ஆம் திகதி தமிழ் அரசியல் கைதிகளின் அறைகளை சோதனை செய்தபோது அங்கு அவர்கள் மாவீரர் தின நிகழ்வை அனுஷ்டிக்க ஏற்பாடுகளை செய்திருந்தமை தெரிய வந்ததாக அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் நேற்றைய வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், சிறைச்சாலைக்குள் தமிழ்க் கைதிகள் வேலுப்பிள்ளை பிரபாகரனின் புகைப்படத்தையும், துப்பாக்கி ஏந்திய விடுதலைப் புலிகளின் சின்னத்தையும் வைத்திருந்ததாக குற்றம் சுமத்தியுள்ளார்.

இவர்களின் அறையில் இருந்து 19 கையடக்கத் தொலைபேசிகள் மீட்கப்பட்டதாகவும் அதில் இணையத்தளத்திற்கு பிரவேசிக்கக் கூடிய வசதிகள் காணப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்

## வடமாகாண பாடசாலைகளுக்கு இலவச பாடநூல் விநியோகம்

(பருத்தித்துறை)

வடமாகாண பாடசாலைகளுக்கான இலவச பாடநூல் விநியோக தின நிகழ்வுகள் எதிர் வரும் 6 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், யாழ்ப்பாணம், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, மன்னார் ஆகிய கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கல்வி பயிலும் தரம் 2 முதல் 11 வரையான மாணவர்களை உள்ளடக்கிய 10 மாணவர்கள் அதாவது ஒவ்வொரு தரத்திலும் வெவ்வேறு பாடசாலை மாணவர்கள் வருகை தரல் வேண்டும்.

அத்துடன், வருகை தரும் 10 மாணவர்களின் பாடசாலை அதிபர்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டும்.

குறிப்பிட்ட வலயங்களில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களும் கலந்து கொள்ள வேண்டும். மேலும் நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் சகல பாடசாலைகளுக்கும் இலவச பாடநூல்கள் விநியோகித்து முடிக்கப்பட்டிருத்தல் வேண்டும். இதனை மேற்பார்வை செய்து உறுதிப்படுத்திக் கொள்வதுடன், இவ் விநியோகத்தின் பட்டியல்களை உடனடியாக மாகாண கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்றையதினம் விநியோக தின நிகழ்வுகள் முடிவடைந்தவுடன் சகல கோட்டக்கல்வி அலுவலர்களுக்குமான கலந்துரையாடல் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எனவே இக்கலந்துரையாடலில் கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் தங்கள் வலயப் பாடசாலைகளில் இதுவரை விநியோகித்த இலவச பாடநூல் தொடர்பான விபரங்களை முழுமையாக மென் பிரதியாக கொண்டு வருதல் வேண்டும் எனத் தெரிவித்தார். (109)

## பொது முயற்சியாண்மை குறித்த கோப் அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பொது முயற்சியாண்மை தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கை (கோப்) நாடாளுமன்றில் சிரேஷ்ட அமைச்சர் டி.யூ. குணசேகரவினால் நேற்றையதினம் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 249 அரசாங்க நிறுவனங்களின் நடவடிக்கைகள் குறித்து இந்த அறிக்கையில் விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த நிறுவனங்களை வினைத்திறனான முறையில் செயற்படுத்துவது குறித்தும் கோப் தெரிவுக்குழு பரிந்துரைகளை சமர்ப்பித்துள்ளது.

அமைச்சுக்களில் பிரதான கணக்கீட்டு அதிகாரியாக பணியாற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களின் கவனயீனமே அநேக நிறுவனங்கள் நட்டமடைவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது என அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஊழல் மோசடிகள் நடைபெற்ற நிறுவனங்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கோப் குழுவிற்கு கிடையாது என அமைச்சர் டி.யூ. குணசேகர தெரிவித்துள்ளார்.

சில விடயங்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


## மரண அறிவித்தல்

### திருமதி விநாயகமூர்த்தி சரஸ்வதி



சிவிலாம்பதி ஒழுங்கை தெல்லிப்பளையை நிரந்தர முகவரியாகவும், குழுக்கண்டி ஒழுங்கை கட்டப்பிராயை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி விநாயகமூர்த்தி சரஸ்வதி அவர்கள் 01.12.2011 நேற்று அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் விநாயக மூர்த்தியின் அன்பு மனைவியும், குமரகுரு, பத்மசோதி, ஜெயசோதி, செந்தில்குமரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், தனலட்சுமி, கிருஷ்ணகுமார், பத்மநாதன், தாரணி ஆகியோரின் மாமியாரும், தினேஸ்குமார், சியாந்தன், சதீஸ், சபேசன், கன்னிகா, கீர்த்தனா, கவீர்த்தனா, கார்த்திகன், தாரணி, தாரகன், கவிந்தா, நவிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜனோசன், ராமினி, திருசிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.12.2011 இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குழுக்கண்டி ஒழுங்கை,
கட்டப்பிராய். (C/137)

தகவல் : குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி விநாயகமூர்த்தி சரஸ்வதி



**எமது நிறுவனத்தில் கடமையாற்றும் விநாயகமூர்த்தி செந்தில் குமரனின் பாசமிகு தாயார் திருமதி விநாயகமூர்த்தி சரஸ்வதி அவர்கள் அகால மரணம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த கவலை அடைவதுடன், அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இதய பூர்வமான அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

– தினமுரசு குடும்பத்தினர்

(இ)


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.